## திலகவதி வருத்தம்



தமிழ்நாட்டின் முதல் பெண் இ.கா.ப. (ஐ.பி.எஸ்.) அதிகாரியான திலகவதியின் முழுப்பெயர், திலகவதி அம்மையார். அவருக்கு ஒரு வருத்தம்.

"நான் படிக்கிற பருவத்தில் பள்ளிக்கூடத்தில் என்னைப் பார்த்து "திலகவதி அம்மையார்" என்று பெயர் வாசித்ததும் எல்லோரும் 'கொல்'லெனச் சிரிப்பார்கள். எனக்கு தர்மசங்கடமாக இருக்கும்.

1976-ம் ஆண்டு எனது காவல் பணி தொடங்கியது. அப்போதும் கூட "திலகவதி அம்மையார்" என்ற பெயரே நீடித்தது. இது எனக்கு இன்னும் அதிக சங்கடத்தைத் தந்தது. அதோடு, பலரும் சுருக்கமாக "ஜிடி. அம்மையார்" என்று என்னை அழைக்கத் தொடங்கி விட்டார்கள். எனவே, 'திலகவதி' என்று பெயர் மாற்றம் செய்து அரசிதழில் அறிவிப்பு வெளியிட்டேன்.

ஆனால், 'அம்மையார்' என்ற அடைமொழி இன்னும் என்னை விட்டபாடில்லை! விழாக்களுக்குப் போனால் மரியாதை நிமித்தமாக "திலகவதி அம்மையார்" என்கிறார்கள். 'நாம் விட நினைத்தாலும், 'அம்மையார்' நம்மை விடுவதாக இல்லையே' என்று சிரித்துக் கொள்ளுவேன்" என்றார், திலகவதி.

## தாயான பிறகும் சாதித்த ஷைனி



கேரளா தந்த தடகள புயல் ஷைனி வில்சன், ஒலிம்பிக் போட்டியில் முதலில் பங்கு பெற்றபோது அவரது வயது 18. தொடர்ச்சியாக 4 ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபெற்ற முதல் இந்தியப் பெண் இவரே! தாயான பின்னும் தேசிய- ஆசிய அளவில் சாம்பியன் பட்டங்கள் பெற்றது இவரது தனிச்சிறப்பு.



# நெஞ்சில் ஒரு நெருப்பு



## 1

### ராஜேஷ்குமார்

அடர்த்தியான இருட்டு கொட்டியிருந்த அந்தக் கிராமத்தின் எல்லையோரம்- திடீரென்று சிவப்பாய் ஒரு வெளிச்சப் புள்ளி தெரிய- அதைத் தொடர்ந்து வரிசையாய் ஏழெட்டு வெளிச்சப் புள்ளிகள் உற்பத்தியாகி மெதுவாய்- கிராமத்தின் மையத்தை நோக்கி நகர ஆரம்பித்தது. காற்றில் பேச்சுக் குரல்கள் கிசுகிசுப்பாய் அலைந்தன.

"மூஞ்சிகளைப் போர்வையாலே இழுத்து

மூடிக்குக்க... ஒரு பய நம்மளை அடையாளம் கண்டுக்கக் கூடாது."

இன்னொரு குரல் இடை நுழைந்தது.

"ராசண்ணே... இப்ப மணி எவ்வளவு இருக்கும்?"

"சரியா ரெண்டு மணி பத்து நிமிடம்."

"இந்நேரத்துக்கு நம்ம கிராமத்துல எவன் முழிச்சிட்டிருக்கப் போறான்?"

குரல் மெல்லச் சிரித்தது.

"அப்படிச் சொல்லாதே... எவனாவது இராத்திரி கருவாட்டுக் குழம்பையும் சோத்தையும் மூக்குபிடிக்க பிடிச்சுட்டு வயித்தை வலிக்குதுன்னு இந்நேரம்தான் கையில் சொம்பை எடுத்துட்டு வெளியே வருவான்."

"அண்ணே..."

"என்னடா?"

"வெளியே வர்றவன் யாராக இருந்தாலும் சரி... வீச்சரிவாளை வீசி ஆளைக் கொன்னுடலாமில்லையா?"

"தாராளமா... நம்ம கண்ணுக்கு யார் எதிர்ப்பட்டாலும் சரி... அது ஆணோ பொண்ணோ... வீச்சரிவாளை வீசித் துண்டாட வேண்டியதுதான்... தாட்சண்ணியமே கிடையாது..."

"நாம தீ வைக்கக் கொளுத்தப்போற அந்த வீட்டுல மொத்தம் எத்தினி பேருண்ணே இருக்காங்க?" கடைசி ஆளாய் வந்துகொண்டிருந்தவன் கேட்டான்.

"மூணு குழந்தைகளையும் சேர்த்து மொத்தம் பதினொரு பேரு... அந்தப் பதினொரு பேரில் யாருமே தப்பிக்கக்கூடாது... தப்பிச்சா நாம மாட்டிக்குவோம்..."

கையிலிருந்த தீப்பந்தங்கள் மண்ணெண்ணெய் வாசனையோடு 'சடசட'வென்று எரிய- அந்த எழெட்டுப் பேர் கிராமத்தின் மண் சாலை ஓரமாய் வேகமாய் நடந்தார்கள்.

"ம்... வேகமா போங்க..."



நெருப்புப் பந்தங்கள் எழுப்பிய புகையிலும், வெளிச்சத்திலும்- பிள்ளையார் கோயில் ஆலமரத்தில் அடைந்திருந்த பறவைகள் சட்டென்று கண்விழித்து, 'கீச்சிட்டுப் பறக்க ஆரம்பித்தன. அவர்கள் அதைப் பொருட்படுத்தாமல் வேகவேகமாய் நடந்தார்கள். பார்வைகளைச் சுழற்றினார்கள். அதே விநாடி-

"லொள்..." -ஆள் அரவமற்ற அந்த கிராமத்தின் புழுதி வீதிகளில் உயர்த்திப் பிடித்த தீப்பந்தங்களோடு- வியர்வை மினுமினுக்கும் முகங்களோடு நடந்துகொண்டிருந்தவர்கள் எதிரே வேகமாய் ஓடிவந்து, மூச்சிரைக்க நின்ற அந்த நாயைப் பார்த்ததும் 'தப்'பென்று நின்றார்கள்.

"லொள்... லொள்..." -நாய் பலமாய் குரைத்தது. ஒருத்தன் கேட்டான்- "ராசண்ணே... இது யார் வீட்டு நாய்?"

"இந்த தொண்டி இராணுவக்காரன் வளர்க்கிற நாய்ன்னு நினைக்கிறேன்..."

அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போதே- அந்த நாய் காதுகளை உயர்த்திக்கொண்டு- கோரைப் பற்கள் தெரிய, "உர்ர்ர்ர்" என்றபடி அவர்களை நோக்கி முன்னேறியது. உடலை வளைத்துப் பம்மியது.

"ச்சு..." முன்னால் இருந்தவன் தீப்பந்தத்தைக் காட்டி விரட்ட-

அந்த நாய் பயப்படாமல் முன்னேறியது. கூடவே, 'லொள்... லொள்' என்று தொண்டை நரம்புகள் தெறித்து விழும்படி சத்தம். பாய்வதற்கான முஸ்தீபுகளில் இறங்கியது.

"அண்ணே! நாயோட ஆவேசத்தைப் பார்த்தா பயமா இருக்கு... உடம்பை கவ்வினா... அரைக் கிலோ சதையை எடுத்துடும் போலிருக்கு... அது பக்கத்துல வர்றதுக்கு முந்தி நான் வீச்சரிவாளை வீசட்டுமா?"

"வீசு..." என்றான், கும்பலில் இருந்த ஒருவன்.

தன் இடுப்பின் தோலுறையில் பளபளப்பாய் தூங்கிக் கொண்டிருந்த அந்த வீச்சரிவாளை எடுத்து- நாயின் தலையை

நோக்கி- காற்றில் 'சக்குபிக்க்க்க்' என்று வீசினான். எல்லோருக்கும் முன்பாய் நின்றிருந்தவன். விநாடிக்கும் குறைவான நேரம்தான்.

"ச்ச்சர்க்க்க்..."

நாய் சத்தம் எழுப்பாமல் துள்ளி விழுந்து- புழுதி மண்ணில் கால்களை உதைத்துக்கொண்டு துடிக்க ஆரம்பித்தது. நாயின் கழுத்தோடு தெறித்து விழுந்திருந்த வீச்சரிவாளை இரத்தமாய் எடுத்துக்கொண்டு- கும்பல் முன்னேறியது.

நாய் தலையில்லா உடம்போடும் ஏராளமான இரத்தத்தோடும் அடங்கிக்கொண்டிருந்தது.

"இன்னிக்கு நம்ம முதல் பலி... இராணுவக்காரனோட நாய்..."

"பாவம்..."

கிராமம் சுவர்க்கோழியின் பின்னணியோடு தூங்கிக்கொண்டிருக்க- அந்தக் கும்பல் நான்கு தெருக்களைத் தாண்டி- வயல்காட்டுக்கு மத்தியில் இருந்த அந்த வீட்டைச் சூழ்ந்தது. அறுவடையை முடித்துக்கொண்ட வயல் சுற்றிலும் பொட்டலாய் தெரிந்தது. இருட்டில் தென்னை மரங்கள் சோம்பலாய் அசைந்தன.

"ஏலே வேலு..." யாரோ கிசுகிசுத்தார்கள்.

"என்னண்ணே?"

"சீமெண்ணெய் யார் வைச்சிருக்காங்க?"

"மாரியப்பனும், மணியும்."

"வீட்டைச் சுத்தியும் ஊத்தச் சொல்லு... யாராவது ஒருத்தன் கூரை மேலே ஏறி ஊத்தட்டும்... தீ வைச்சா குபீர்ன்னு நாலா பக்கமும் பத்திக்கணும்... ஏலே ராசு..."

"சொல்லுண்ணே!"

"வீட்டை முன்னாடியும் பின்னாடியும் பூட்டிடு..."

"சரிண்ணே."



ஆட்கள் நெருப்புப் பந்தத்தோடு இருட்டில் பரவினார்கள். இரண்டு பேர் மண்ணெண்ணெய் டின்களை சாய்த்துப் பிடித்துக்கொண்டு- வீட்டின் சுவரோரமாய் 'களகள'வென்று கொட்டிக்கொண்டே போனார்கள். வீட்டுக் கூரையின்மேல் ஒருத்தன் சத்தமில்லாமல் நடந்து- மண்ணெண்ணெயைத் தெளித்தான்.

இன்னொருவன், வீட்டின் முன்புறத்தையும், பின்புறத்தையும் கனமான பூட்டுகளால் பூட்டினான். எல்லாமே துல்லியமாய் நடை பெற்றுக்கொண்டிருந்தது.

"ம்... சீக்கிரம்..."

"ஆச்சண்ணே..."

எல்லாரும் ஒரே இடத்துக்கு வந்தார்கள்.

"சரி... ஒரே நேரத்துல நம்ம கையில இருக்கிற தீப்பந்தங்களை வீசி எறியணும்... வீசி எறிஞ்ச பின்னாடி எல்லாரும் திக்குக்கு ஒருத்தரா ஓடிடணும்! யாரும் நின்னுகிட்டு வேடிக்கைப் பார்க்கக்கூடாது... அவனவன் வீட்டுல போய் 'கம்'ன்னு படுத்துக்கணும்... நாளைக்கு சாயங்காலம் வரை எவனும் வெளியே தலைகாட்டக்கூடாது..."

"சரிண்ணே."

"ம்... தீப்பந்தங்களை வீசுங்க..."

வீசினார்கள்.

'சர்ர்ர்ர்ர்ர்' என்று காற்றில் சீறிக்கொண்டே எட்டு பந்தங்களும் நெருப்புத் தலைகளோடு வீட்டின்மேல் நாலா பக்கங்களிலும் போய் விழுந்தன.

விழுந்த விநாடியே-

தீப்பந்த நெருப்பு கோஷ்டி சேர்த்துக்கொண்டு- வளர்ந்த சோளப்பயிர் உயரத்திற்கு எழுந்து- எரியத் தொடங்கியது. எட்டு பேரும் எட்டு திசைகளை நோக்கி ஓடினார்கள். தலை தெறிக்கிற ஓட்டம்.

மண்ணெண்ணெயில் ஊறியிருந்த வீட்டை தீயின் நாக்குகள்

சப்புக்கொட்டி சாப்பிட- வீட்டுக்குள்ளிருந்து முதலில், லேசாய்- பிறகு பலமாய்- பின் பதற்றமாய் குரல்கள் கேட்க ஆரம்பித்தன. அலறினார்கள்.

"நாகம்மா! எந்திரி... யாரோ வீட்டுக்கு தீ வைச்சுட்டாங்க போலிருக்கு..." ஆண் குரல் பரபரப்பாக சொல்லியது.

அந்தப் பெண் குரல் வீறிட்டது. "அய்யய்யோ... எப்பாலங்க? யார் பண்ணின வேலை, இது?"

"அதை அப்புறமா தெரிஞ்சுக்கலாம்... மொதல்ல கொளந்தைகளை எழுப்பு..."

பெண் குரல் கீச்சிட்டது. "லே தண்டபாணி... குமாரி... எந்திரிங்க... எந்திரிங்க..."

வீட்டுக்குள் இப்போது நிறைய காலடிச் சத்தங்கள்... பயக் குரல்கள்... பெண்களின் அழுகைக் குரல்கள்...

"அப்பா... அப்பா..."

"முன்பக்கம் போக முடியாது..."

"வெளியே யாரோ பூட்டி இருக்காங்க..."

"பின்னாடிப் பக்கம் வாங்க... நாகம்மா, குழந்தைகளை தூக்கிக்க... டேய், பொன்னுச்சாமி... கதவை உடைக்க முடியுமான்னு பாரு..."

"பார்த்துட்டேன்ப்பா... முடியலை..."

"பின்பக்கக் கதவும் பூட்டியிருக்கு..."

"எ...எ... என்னங்க பண்ணுறது?" ஒரு பெண் குரல் வீறிட்டுக் கேட்டுக்கொண்டிருக்கும்போதே மேற்கூரை 'சடச்சட'வென்று நெருப்புக்கங்காய் எரிந்து வீட்டின் மையப் பாகத்தில் விழ-

"அ...அ...அம்மா... ஆ...ஆ...ஆ...ஆ...ஆ...!"

நெருப்பில் நனைக்கப்பட்ட அந்த அலறல்- எரிந்து கொண்டிருந்த வீட்டினின்றும் வெளியே வந்து- காற்றில் கலந்து கிராமத்தைக் கூப்பிட்டது.

தூக்கத்தினின்றும் உசுப்பப்பட்ட ஜனங்கள் வீட்டுக்கு



வெளியே வந்து பதற்றமானார்கள். ஓட்டமும் நடையுமாய் பரபரத்தார்கள்.

"ராயப்பனோட வீடு எரியுது..."

"ஓடியாங்க... சீக்கிரம்..."

"அம்மாடி... என்ன, இது? களுத் தியாட்டம் எரியுது..."

"அவனு இங்கே அடிக்குதே?"

அந்தப் பத்து நிமிடத்திற்குள் கிராமமே விழித்துக்கொண்டு ராயப்பனின் வீட்டைச் சுற்றிலும் பரவியிருந்தது. புழுதி மண்ணையும், நீரையும் வாரி வாரி இறைத்தார்கள். மனித முயற்சிகளை அலட்சியப்படுத்திவிட்டு நெருப்பு இன்னும் வேகவேகமாய் திகுதிகுவென்று எரிய ஆரம்பித்தது.

## 2

மறுநாள் காலை ஆறு மணி.

சூரிய முகம் தெரியாத கிழக்குத் திசையில், லேசாய் வெளிச்சம் தெரிய, கிராமம் மொத்தமும் அந்தப் பொட்டலான வயல்வெளியில் நின்றிருந்தது. மண்சாலை முடிவில் போலீஸ் ஜீப் ஒன்று தெரிய- போலீசார் புகைத்துகொண்டிருந்த வீட்டைச் சுற்றிலும் பரவி இருந்தார்கள். வீடு முழுவதுமாய் எரிந்துபோயிருந்தது.

சுற்றுப்புற சுவர்கள் மட்டும் புகையால் கறுப்புப்படிந்துப்போய் தெரிந்தது. வயல் வரப்புமேட்டில்- தீய்ந்துபோன சடலங்கள் வரிசையாய் கிடத்தப்பட்டு- வெள்ளைப் போர்வையால் மூடப்பட்டு- காற்றில் ஒரு கெட்ட நாற்றம் உறைந்துபோயிருந்தது.

சீருடையில் தெரிந்த அந்த இளவயது சப்-இன்ஸ்பெக்டர் கொஞ்சம் திடுக்கிட்டுப் போயிருந்தார். வரிசையாய் பதினொரு பிணங்கள்- சரியாய் சுடப்படாத ரொட்டிகள் மாதிரி தீய்ந்து போய், முகம் கருகி- கைகளும் கால்களும் கரிக்கட்டைகளாய்- மூன்று வயதிலிருந்து அறுபது வயது வரை உள்ள வயதுகளில்

உடல்கள் வரிசையாய்–

அதிர்ச்சியை செரிக்க சிரமப்பட்டார் சப்–இன்ஸ்பெக்டர். அருகே தளர்ந்துபோய் நின்றிருந்த ஊர்ப் பெரியவரிடம் கேட்டார்–

"மொத்தம் பதினொரு பேர் செத்திருக்காங்க. அந்த பதினொரு பேரும் யார், யாருன்னு சொல்ல முடியுமா?" –கையிலிருந்த டைரி மேல் 'பால்பாயிண்ட்' பேனா ஓடிக்கொண்டிருந்தது.

எழுபது வயதான ஊர்ப் பெரியவர்– தன் மூக்கைச் சொறிந்து கொண்டே சொன்னார்–

"ராயப்பன்– அவனோட சம்சாரம் நாகம்மா– மூத்தமகன் பொன்னுச்சாமி– ரெண்டாவது பையன் தங்கவேலு– கடைசிப் பையன் முருகானந்தம்– பொன்னுச்சாமியோட சம்சாரம் செல்லம்மா– தங்கவேலுவோட சம்சாரம் கண்ணம்மா– நாகம்மாவோட தம்பி தண்டபாணி– பொன்னுச்சாமியோட ஏழு வயசுப் பையன் குமாரு– அஞ்சு வயசு பொண்ணு மயிலா– தங்கவேலுவோட மூணு வயசு பொண்ணு ஜெயம்..."

"இந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவங்களே மொத்தம் பதினொரு பேர்தானா?"

"ஆமா."

"இந்த தீ விபத்துக்குக் காரணம் என்னவா இருக்கும்ன்னு நீங்க நினைக்கிறீங்க?"

"எனக்குத் தெரியலீங்க இன்ஸ்பெக்டரய்யா..."

அவர் சொல்லிக்கொண்டிருக்கும்போதே– அவர்களுக்குப் பின்னால்– மண் சாலையில் அந்த 'தட் தட்' சத்தம் கேட்டது. சப்–இன்ஸ்பெக்டர் திரும்பிப் பார்த்தார்.

எருமைத்தனமாய் இருந்த அந்த மோட்டார் சைக்கிளில் இருந்து கீழே இறங்கிக்கொண்டிருந்தார், கிராமத்து பஞ்சாயத்துத் தலைவர் கார்மேகம். வெள்ளை வெளேர் வேட்டி– சட்டை, தோளின் மேலே குட்டையாய் ஒரு துண்டு, தேர்தல் வெற்றி அவருடைய நிறத்தைக் கூட்டி இருந்தது. காதோர நரைக்கும்–



முன்னுச்சி ரோமக் கற்றைக்கும் 'டை' அடித்திருந்தார். கழுத்தில் செயின் புரண்டது.

"வணக்கம் சப்–இன்ஸ்பெக்டர்..." வாயைத் திறந்தபோது, தங்க மினுக்கம் தெரிந்தது.

சப்–இன்ஸ்பெக்டர் புன்னகைத்தார். "எந்தக் கேள்வியைக் கேட்டாலும் ஜனங்க வாயைத் திறக்கமாட்டேங்கிறாங்க சார்..."

"பயம்தான்..."

"உங்ககிட்டே வரலாம்ன்னு நினைச்சிட்டிருந்தேன்... நீங்களே வந்துட்டீங்க..."

"என்கிட்டே என்ன கேக்கப்போறீங்க?"

"இந்தத் தீ விபத்துக்குக் காரணம் என்னவா இருக்குமன்னு நீங்க நினைக்கிறீங்க?"

"சாதிச் சண்டை, பங்காளிப் பிரச்சினை... வயல் வரப்புத் தகராறு... சோரம் போன பெண்டாட்டி மேலே கோபம்... இப்படி ஏதாவது ஒண்ணு இருக்கலாம்..."

"இப்படி பதினொரு பேரை ஈவு இரக்கம் இல்லாம சுட்டுப் பொசுக்கி இருக்காங்களே... அவங்க யாரா இருக்க முடியும்ன்னு நினைக்கிறீங்க?"

பஞ்சாயத்துத் தலைவர் கார்மேகம் சிரித்தார். கடைவாயிலும் ஒரு தங்கத்துணுக்கு ஒளிந்திருப்பது இப்போது தெரிந்தது.

"சப்–இன்ஸ்பெக்டர்! இந்த கிராமத்துல மொத்தம் ஐயாயிரம் பேர் இருக்காங்க... யார் யாருக்கு யார் பகைன்னு சொல்லவே முடியாது. இந்த ராயப்பனோட குடும்பத்தை மாத்திரம் யோக்கியமான குடும்பம்ன்னு நினைச்சுடாதீங்க... ராயப்பனும் சரி; அவனோட மூணு மகன்களும் சரி– அடாவடி ஆசாமிங்க... பண விசயத்துல நிறைய பேரை ஏமாத்தி இருக்காங்க... ஊருக்கு ஒரு கூத்தியா, இராத்திரியானா சாராயம்... எவனாவது எதிர்த்துப் பேசினா அடி உதை...

இப்படி ரெண்டு வருடத்துக்கு முன்னாடி வரை ஒரு சாம்ராஜ்ஜியத்துக்கு ராஜா மாதிரியே ராயப்பன் இருந்தான்...

நடுவுல ஒன்றரை வருடம் அவனும், அவனோட மூணு பசங்களும் ஒரு வழக்குல சம்பந்தப்பட்டு ஜெயிலுக்குப் போனாங்க... ஆறு மாசத்துக்கு முன்னாடிதான் திரும்பி வந்தாங்க... ஒழுங்கா விவசாயம் பார்த்துட்டிருந்தாங்க... பழைய தோரணை மிடுக்கெல்லாம் குறைஞ்சுபோயிருந்தது. இத்தனை நாள் கழிச்சு யாரோ இந்தக் குடும்பத்தைப் பழிவாங்கி இருக்காங்க..."

"அவங்க மூணு பேரும் எதனாலே ஜெயிலுக்குப் போனாங்கன்னு தெரியுமா?" சப்-இன்ஸ்பெக்டர் ஆர்வமாய் கேட்டார்.

"ஏதோ... கொலை முயற்சின்னு சொன்னாங்க!"

"கொலை முயற்சியா? யாரை கொலை பண்ண முயற்சி பண்ணினாங்க?"

"எனக்கு சரியா விபரம் தெரியலை..."

கார்மேகம் சொல்லி உதட்டைப் பிதுக்கின அதே விநாடி—பின்பக்கமிருந்து குரல் கேட்டது.

"எக்ஸ்க்யூஸ் மீ சப்-இன்ஸ்பெக்டர்..."

சப்-இன்ஸ்பெக்டர் திரும்பினார்.

சற்று உயரம் குறைவாய் மாநிறத்தில் மூக்குக் கண்ணாடியோடு... முப்பத்தைந்து வயதில் அவர் நின்றிருந்தார். முகத்தில் படிப்பு வெளிச்சம் அடித்தது.

"எஸ்" என்றார், சப்-இன்ஸ்பெக்டர்.

"என் பேர் மகாதேவன்... சோலையார்புரம் பள்ளிக்கூட வாத்தியார். இந்த ராயப்பனைப் பத்தி எனக்குச் சில விபரம் தெரியும். சொல்லலாமா சார்?"

சப்-இன்ஸ்பெக்டர் முகம் மலர்ந்தார்.

"தாராளமா சொல்லலாம்... வாங்க இப்படி! வந்து சொல்லுங்க..."

மகாதேவன், சப்-இன்ஸ்பெக்டரை நெருங்கினார். மெல்லச் சொன்னார்—

"இந்த ராயப்பனும் அவரோட மகன்களும் சோலையார்



புரத்துல இருக்கிற ஒரு மிராசுதாரைக் கொலை செய்ய முயற்சி பண்ணினாங்க! ஆனா, அதுக்கான காரணம் என்னன்னு எனக்குத் தெரியலை..."

"மிராசுதாரா? அவர் பெயரென்ன?"

"ரத்தினபூபதி."

"அந்த ரத்தினபூபதியை ராயப்பனும் அவனோட மகன்களும் கொலை செய்ய முயற்சி பண்ணினாங்களா?"

"ஆமா... ஆனா ரத்தினபூபதியோட ஆட்கள் அவங்களை மடக்கிப் பிடிச்சு போலீஸ் ஸ்டேசனுக்குக் கொண்டு போயிட்டாங்க... நானே அந்தச் சம்பவத்தை நேரில் பார்த்தேன்."

"மிஸ்டர் மகாதேவன்... உங்களுக்கு சொந்த ஊர் எது?"

"கோயமுத்தூர். தற்சமயம் இந்த பாறைப்பள்ளம் கிராமத்துல தங்கி, தினசரி பஸ் பிடிச்சு சோலையார்புரம் போயிட்டிருக்கேன்."

"ராயப்பனோட வீட்டுக்குத் தீ வைச்சது யாரா இருக்கும்ன்னு நீங்க நினைக்கிறீங்க மகாதேவன்?"

"எனக்குத் தெரியலை சார்... நான் யாரையும் சந்தேகமா சொல்ல விரும்பவில்லை... எனக்குத் தெரிஞ்ச ஒரு தகவலை சொல்லாம மறைக்கிறது தப்புன்னு எம்மனசுக்குப்பட்டது. அதான், நானாக வந்து உங்ககிட்டே சொன்னேன்..."

"நன்றி."

காவலர் ஒருவர் குறுக்கே வந்தார்.

"சார்..."

"என்ன?"

"பிரேத வேன் வந்துட்டிருக்கு. பிணத்தை ரோட்டோரமா கொண்டுபோய் கிடத்திக்கிட்டா... வேனில் ஏத்த வசதியா இருக்கும் சார்..."

"ம்..."

சப்-இன்ஸ்பெக்டர், கிடத்தப்பட்டிருந்த உடல்களை நோக்கி

நகர்ந்தார். ராயப்பனுக்கு வேண்டப்பட்ட உறவுக்கார கிழவி ஒருத்தி- கமறிப்போன குரலில் ஒப்பாரி வைத்தபடி அழுது கொண்டிருக்க- அதற்குள் செய்தியைக் கேள்விப்பட்டு- கோயமுத்தூரிலிருந்து வந்திருந்த பத்திரிகையாளர்களும்- புகைப்படக்காரர்களும்- எரிந்துபோன வீட்டை மொய்த்திருந்தார்கள்.

காமிராக்கள் கண்களை சிமிட்டிக்கொண்டிருக்க-

நிருபர்கள் வெள்ளைத் தாள்களைக் கறுப்பாக்கிக் கொண்டிருந்தார்கள். 'காலைக் குரல்' பத்திரிகை நிருபர் உதட்டில் புகையும் சிகரெட்டோடு- அந்தச் செய்திக்கு இப்படித் தலைப்பு போட்டுக்கொண்டிருந்தார்.

பாறைப்பள்ளம் கிராமத்தில்

## குடும்பமே வெந்து மாண்ட கோரம்!

### கொலையா? விபத்தா? - போலீஸ் திணறல்!

## 3

சென்னை.

அகோரமாய் வெயில் அடிக்கும் ஒரு முற்பகல் நேரம். தேசியக் கொடி பறந்துகொண்டிருந்த போலீஸ் கமிஷனரின் அலுவலகம்.

'வயர்லெஸ்' பொருத்தப்பட்ட மோட்டார் பைக்கில் புகை கக்கிக்கொண்டு உள்ளே நுழைந்தான், ரத்தினகுமார். வயது முப்பதுக்குள். போலீஸ் துறைக்குத் தோதான உடம்பு. கிராப்பை ஒட்ட வெட்டி, மீசையை ஒரு நறுக்கு மாதிரி வைத்திருந்தான். கண்களில் பளபளப்பு. சிகரெட் ஸ்பரிசம் படாத உதடுகளில் பெண்மைத்தனமான அந்த நிறம் உறைந்துபோயிருந்தது. கனமான உடையில் கொஞ்சம் பிதுக்கமாய்த் தெரிந்தான்.



பைக்கை நிறுத்திவிட்டு- கடப்பைக்கல் வேய்ந்த நீளமான வராந்தாவில் நடந்து, கோடியில் எதிர்ப்பட்ட கமிஷனரின் அறைக்குள் நுழைந்தான். நரை மீசையை வருடிக்கொண்டு- வெள்ளரிப்பழ நிறத்தில் உட்கார்ந்திருந்த கமிஷனருக்கு விரைப்பான 'சல்யூட்' ஒன்றை விநியோகித்தான்.

"வாங்க ரத்தினகுமார்!"

ரத்தினகுமார் 'சல்யூட்'டிலிருந்தும் தளர்ந்தான். கமிஷனர், எதிரேயிருந்த நாற்காலியைக் காட்டினார்.

ரத்தினகுமார் உட்கார்ந்தான்.

கமிஷனர் நாலைந்து தமிழ்த் தினசரிகளையும், ஆங்கில இதழ்களையும் எடுத்து அவன் முன்னால் பரப்பினார்.

"செய்தி பார்த்தீங்களா ரத்தினகுமார்?"

"பார்த்தேன் சார்."

"படிச்சீங்களா?"

"தரோவா படிச்சேன் சார்."

"சம்பவம் உங்க சொந்த கிராமத்துல நடந்திருக்குங்கிற ஒரேயொரு காரணத்துக்காகத்தான் உங்ககிட்டே பேசப் பிரியப்பட்டேன்..."

"ஆச்சரியமா இருக்கு சார்... என் பிறந்த ஊரான பாறைப் பள்ளம் கிராமம் அமைதிக்குப் பேர்போனது. அந்த கிராமத்துல எந்த வன்முறையும் நடப்பதில்லைங்கிற ஒரேயொரு காரணத்துக் காக- போலீஸ் ஸ்டேஷனை பக்கத்துக் கிராமமான சோலையார்ல வைச்சாங்க... அந்த மாதிரியான கிராமத்துல- இந்த மாதிரியான கொடுமைச் சம்பவமா? இது எனக்கு சரியா படலை சார்..." கமிஷனர் தன் சுத்தமான பல்வரிசையைக் காட்டிப் புன்னகைத்தார். "இந்த கிராமத்து ஜனங்களை நம்பவே முடியாது, ரத்தினகுமார்... அவங்க கோபமெல்லாம் நீறுபூத்த நெருப்பு மாதிரி. நாம எதிர்பார்க்காத ஒரு நேரத்துல அனலை வாரிக் கொட்டிடும்... நான் இப்போ உங்களைக் கூப்பிட்டது எதுக்காகத் தெரியுமா, ரத்தினகுமார்?"

...சொல்லுங்க சார்."

"நீங்க இன்னிக்கே உங்க கிராமத்துக்குப் புறப்படறீங்க. பத்து நாள் அங்கே தங்கி, அந்த மோசமான கொலைகளுக்கான காரணத்தையும்– அதுக்குக் காரணமா இருந்தவங்களையும் கண்டுபிடிக்கிறீங்க..."

"எஸ், சார்" விரைப்பாய் நிமிர்ந்து உட்கார்ந்தான் ரத்தினகுமார். கமிஷனர் தொடர்ந்து கேட்டார்.

"இந்த கேசை விசாரிக்கிறதுல உங்களுக்கொண்ணும் சிரமமில்லையே?"

"இல்லை சார்... என்னோட கிராமத்துல இருக்கிற ஒவ்வொருத்தரைப் பற்றியும் எனக்குத் தெரியும். ராயப்பனோட குடும்பத்தைக் கூண்டோடு சுட்டுப்பொசுக்கின ஆசாமிங்க நிச்சயமா வெளியூர் ஆசாமிகளா இருக்கமாட்டாங்க. உள்ளூர்க்காரங்களாத்தான் இருக்கணும்கிறது என்னோட கணிப்பு சார்..."

"அந்த எண்ணத்தை வைச்சுத்தான் அந்தக் கிராமத்துக்கு உங்களை அனுப்ப முடிவு பண்ணினேன். ஆனா, அங்கே நீங்க மட்டும் போகப்போறதில்லை. உங்ககூட மிஸ் ரேகா வரப்போறாங்க."

"ரேகாவா?"

"ஆமா... புதுசா வந்த அஞ்சு பெண்களில் ஒருவர்தான் ரேகா. அதி புத்திசாலி. நான் 'இண்டர்வியூ' பண்ணும்போதே அசந்துபோயிட்டேன்!"

"மிஸ் ரேகா என்கூட கிராமத்துக்கு வரப்போறாங்களா சார்?"

"எஸ்... ரேகாவுக்கு இது ஒரு பயிற்சி மாதிரி... இதுவரைக்கும் தகவல்களைப் படிச்சுட்டிருந்த ரேகாவுக்கு இது முதல் 'பிராக்டிகல்'. நீங்கதான் பயிற்சி கொடுக்கணும். ரேகாவுக்கு கொஞ்சம் அவசரம் அதிகம்... நீங்கதான் கவனமா கையாளணும்."

"எஸ் சார்" எழுந்தான்.



"ஒரு நிமிடம்... ரேகாவை உங்களுக்கு அறிமுகப்படுத்திடறேன்" என்று சொன்ன கமிஷனர், இண்டர்காமின் ரிசீவரை எடுத்து பட்டன்களைத் தட்டினார். மெலிதான குரலில் பேசினார்.

"ரேகா இருக்காரா?"

"........."

"என் அறைக்கு அனுப்புங்க."

"........."

ரிசீவரை வைத்துவிட்டு பால்கோவா பளபளப்போடு இருந்த தன் மோவாயைத் தடவிக்கொண்டே ரத்தினகுமாரை பார்த்தார், கமிஷனர்.

"மிஸ்டர் ரத்தினகுமார்."

"சார்..."

"இந்த கேசை நீங்க ஒரு வாரத்துக்குள் முடிவுக்குக் கொண்டுவரணும். இல்லேன்னா, அடுத்த பதினைஞ்சு நாளில் கூடப்போற சட்டசபையில் எதிர்க்கட்சிக்காரங்க போலீஸ் துறையை 'பீஸ்பீசா' கிழிச்சிடுவாங்க..."

"செய்கிறேன் சார்."

ரத்தினகுமார் சொல்லிக்கொண்டிருக்கும்போதே– அறை கதவு தயக்கமாய்த் திறந்தது. சந்தன நிற சேலையிலும், உயர்த்திப் போட்ட கொண்டையிலும் அழகாய்த் தெரிந்த அந்தப் பெண் உள்ளே வந்தாள். சற்று நீள வட்ட முகம். லேசான மைப் பூச்சுக்கு உட்பட்டிருந்த கண்கள் 'கஜல்' பாடின. சின்ன நாசிக்குக் கீழே சிவப்பு வெல்வெட் துணியைக் கத்தரித்து ஒட்டின மாதிரி உதடுகள். இரண்டு காதுகளிலும் லேசாய் ஊஞ்சலாடும் பாசிமணி தொங்கட்டான்கள். 'பிரா'வுக்குச் சொந்தமான அவயங்கள் கொஞ்சம் அதிகப்பிரசங்கித்தனம் பண்ணின.

காவல்துறையில் இருக்கும் ஒரு பெண்ணை இதுக்கு மேலும் வர்ணித்தால் அது நாகரிகம் இல்லை. இத்தோடு விட்டுவிடுவோம்.

"குட்மார்னிங் சார்" என்றான், அவன்.

"வாங்க மிஸ் ரேகா... கமிஷனர் வரவேற்று நாற்காலியைக் காட்டினார். ரேகா புன்னகையோடு நடந்து போய் அந்த நாற்காலியை நிரப்பினாள். அவள் உடம்பினின்றும் வெளிதான 'சென்ட்' நாசுக்காய் மின்விசிறி காற்றில் பரவியது.

"மிஸ் ரேகா... இவர் மிஸ்டர் ரத்தினகுமார்..."

ரேகா ஒரு பிரகாசமான புன்னகையை சக அதிகாரி ரத்தினகுமாருக்குக் கொடுத்துக்கொண்டே— தன் கைகளைக் குவித்து "ஹலோ" என்றாள். ரத்தினகுமாரும் ஒரு புன்னகையைக் கடனாகக் கொடுத்து "ஹலோ" என்றான்.

கமிஷனர் குறுக்கிட்டார்:

"மிஸ் ரேகா... நீங்களும் ரத்தினகுமாரும் இன்னைக்கு இராத்திரி திருவள்ளூரில் பாறைப்பள்ளம் கிராமத்திற்குப் போகப் போறீங்க. பாறைப்பள்ளம், ரத்தினகுமாரின் சொந்த ஊர். அங்கே நடந்த கோரமான சம்பவங்களைப் பத்தி நீங்க பத்திரிகைகளில் படிச்சிருப்பீங்க. அந்த சம்பவங்களுக்குக் காரணமான குற்றவாளிகளைப் பிடிக்கத்தான் அவர் போகிறார். நீங்க அவர்கூட ஒத்துழைக்கணும்."

"நிச்சயமா சார்..." என்றாள், ரேகா.

"நீங்க ரெண்டு பேரும் புறப்படறதுக்கான ஏற்பாடுகளைப் பண்ணுங்க. தேவையான வசதிகளை நீ வாங்கிக்கலாம். வாழ்த்துகள் என்ற கமிஷனர், எழுந்து நின்று விடை கொடுக்க— அவருக்கு விரைப்பான 'சல்யூட்'களைக் கொடுத்து விட்டு— அறையைவிட்டு வெளியே வந்தார்கள், ரத்தினகுமாரும், ரேகாவும்.

ரேகா சிரித்துக்கொண்டே கேட்டாள்:

"ஏன் சார்... உங்களுக்குச் சொந்த ஊரே பாறைப் பள்ளம்தானா?"

"ஆமா."

"அது பெரிய ஊரா?"



"இல்லை... ஒரு சின்ன கிராமம்... போலீஸ் ஸ்டேஷன்கூட இல்லை. கிராமத்தோட மொத்த ஜனத்தொகையே ஆயிரம் பேர்தான்."

"செத்துப்போன ராமையாவோட குடும்பத்தை உங்களுக்குத் தெரியுமா சார்?"

"தெரியும்."

"அந்த தீ வைப்புச் சம்பவத்துக்குக் காரணம் என்னவாய் இருக்கும் சார்?"

"அங்கே போய் விசாரிச்சாத்தான் தெரியும்!"

"நாம அங்கே எவ்வளவு நாள் இருக்கவேண்டியிருக்கும் சார்?"

"ஒரு வாரம், பத்து நாள் ஆகலாம்."

"நாம சாப்பிட— தங்க இடம்?"

"என் வீடுதான் கிராமத்துல இருக்கே... அந்த கிராமத்திலே பெரிய வீடு எங்க வீடுதான். அந்தக் காலத்துல எங்கப்பா கட்டினது."

"நான் ஒரு கேள்வி கேட்டா தப்பா நினைக்க மாட்டீங்களே சார்?"

"இல்லை... தாராளமாகக் கேட்கலாம்..."

"உங்களுக்குக் கல்யாணம் ஆயிடுச்சா சார்?"

"நான் இன்னும் அந்தத் தப்பைப் பண்ணலை."

ரேகா, தன் ஆரோக்கியமான ஈறுகள் தெரிய சிரித்துவிட்டுக் கேட்டாள்: "அப்போ அந்தக் கிராமத்து வீட்டுல யார் யார் இருக்காங்க?"

"என்னோட மூத்த சகோதரர் ஒருத்தர் இருக்கார். படிச்சவர், ஆனா, விவசாயம் ஒண்ணுதான் அவருக்குத் தெரியும். அந்தக் கிராமத்தைவிட்டு வெளியே எங்கேயும் போகாதவர். அந்த வீட்டுலதான் நீங்களும் நானும் தங்கப்போறோம்."

"நீங்க போலீஸ் துறையில் இருக்கிற விசயம் உங்க ஊர்

ஜனங்களுக்குத் தெரியுமா சார்?"

"தெரியாது. சென்னையில் ஏதோ அரசாங்க உத்தியோகம் பார்க்கிறேன்னு ஓரளவு படிச்ச ஜனங்களுக்குத் தெரியும். மத்தவங்களுக்கு அதுவும் தெரியாது."

"நான் உங்ககூட வந்தா என்னை யாருன்னு கேக்க மாட்டாங்களா? ரேகா அவனையொட்டின மாதிரியே வந்துகொண்டிருக்க- ரத்தினகுமாருக்கு அந்த நெருக்கும் மனசுக்குள் தீப்பொறி போட்டது.

அவளுடைய உடம்பின் மேலிருந்து வீசிய பவுடர் 'சென்ட்' வாசமும் அவனை அசைத்தன!

"என்ன சார்... நான் கேட்ட கேள்விக்குப் பதிலே சொல்லலை?"

ரத்தினகுமார் சுதாரித்தான்.

"நீங்க கிராமத்துக்கு வந்தா கண்டிப்பா உங்களை யாருன்னுதான் கேட்பாங்க!"

"நீங்க என்ன சொல்லுவீங்க?"

"என்ன சொல்லட்டும்?"

"பொய் சொன்னாலும் அவங்க நம்புற மாதிரி பொய் சொல்லணும்..."

"எப்படி?"

"என்னைக் கட்டிக்கப்போற முறைப்பொண்ணுன்னு..."

ரேகாவின் முகத்தில் சில இரசாயன மாற்றங்கள் நிகழ்ந்து, குங்குமம் அப்பின மாதிரி சிவப்பாயிற்று.

## 4

**வி**டியற்காலை 5 மணி.

இராத்திரி பூராவும் ஓடின களைப்பில், அயர்ந்துபோய்ச் சோலையார்புரம் நிறுத்தத்தில் நின்றது, பேருந்து.



கிழக்குத் திசை இன்னமும் பிடிவாதமான இருட்டில் இருந்தது.

தூக்கம் விழித்த கண்களோடும், சிலும்பின கேசத்தோடும் கீழே இறங்கினார்கள்- ரத்தினகுமாரும், ரேகாவும். கைகளில் தலா ஒரு வி.ஐ.பி. சூட்கேஸ். ரேகா கீழே வந்து நின்று சுற்றும் முற்றும் பார்த்தாள்.

பார்த்த திசை பூராவும் இருட்டு.

எங்கோ சில வெளிச்சக் கண்கள்.

"என்ன சார்... ஊர் இப்படி இருக்கு?"

"சோலையார்புரம் கொஞ்சம் பெரிய கிராமம்... அதுவே இப்படி இருக்குன்னா பாறைப்பள்ளம் எப்படி இருக்குமன்னு யோசிச்சுப் பாருங்க, ரேகா."

பேருந்து புறப்பட்டுப் போனதும் ரேகா கேட்டாள்: "இங்கிருந்து பாறைப்பள்ளம் எத்தனை கிலோமீட்டர்?" "மூணு கிலோமீட்டர். ஆறு மணிக்கு ஒரு பஸ் வரும். அந்த பஸ் வர்ற வரை ஏதாவது திட்டுல உட்கார்ந்திருக்க வேண்டியதுதான்."

"ஏன், நடந்து போக முடியாதா?"

"மூணு கிலோமீட்டர் தூரம் உங்களாலே நடக்க முடியுமா?"

"தாராளமா."

"நீங்க தயாருன்னா நானும் தயார். ரோடு கொஞ்சம் மோசமா இருக்கும். வழியில வெளிச்சம் கிடையாது... இருட்டா இருக்கும்..."

"இருட்டா இருந்தா என்ன? நம்மகிட்டதான் 'டார்ச்' இருக்கே?" சொன்ன ரேகா, தன் சூட்கேசைத் திறந்து- அந்த நீளமான டார்ச்சை எடுத்துக்கொண்டாள். பட்டனைத் தட்டி வெளிச்சத்தைக் கொட்டினாள்.

"போலாமா சார்?"

"கமிஷனர் சொன்ன மாதிரி உங்களுக்கும் துணிச்சல் அதிகம்தான், ரேகா. நீங்க எந்த காலேஜில் படிச்சீங்க?"

"ஸ்டெல்லாமேரீஸ்..."

"அப்பா பிஸிடெரிகாரரா?"

"ஆமா."

"அப்ப இந்தத் தைரியம் நியாயமான தைரியம்தான்."

இருவரும் சிரித்துக்கொண்டே நடந்தார்கள்.

இறுகிப்போன மண் சாலை. ஆங்காங்கே சரளைக் கற்கள் தலைதூக்கி, பாதையை இம்சைப்படுத்தின. சாலையின் இரண்டு பக்கங்களிலும், கற்றாழைப் புதர்கள் துணைக்கு வர– இருட்டுக்குப் பின்னணியாய் சில்வண்டுகள் கோஷித்தன.

"இந்த ரோட்டுலதான் பஸ் போகுமா சார்?"

"ஆமா."

"ரொம்பவும் குறுகலா இருக்கே... எதிர்ல ஒரு பஸ் வந்தா... இன்னொரு பஸ் எப்படி ஒதுங்கி வழிவிடும்?"

ரத்தினகுமார் சிரித்தான்.

"ஏன் சார் சிரிக்கிறீங்க?"

"சோலையார்புரத்துக்கும் பாறைப்பள்ளத்துக்கும் போயிட்டு வர்றது ஒரே பஸ்தான். ஒரு நாளைக்குப் பத்து தடவை போகும்; பத்து தடவை வரும்... அந்த பஸ்சுக்கு எதிரா எந்த ஜென்மத்திலும் இன்னொரு பஸ் வராது."

ரேகா சிரித்து ஏதோ சொல்ல வாயெடுத்த விநாடி–

அந்த முனகல் சத்தம் கேட்டது:

"ம்...மா...ஆ...ம்...மா...ஆ..."

ஒரு பெண்ணின் தீனமான முனகல்.

ரத்தினகுமாரும், ரேகாவும் சரேலென்று நின்று ஒருத்தரையொருத்தர் பார்த்துக்கொண்டார்கள்.

"சார்... ஒரு பெண்ணோட முனகல் சத்தம் கேட்கலை?"

"ஆமா."

'டார்ச்' வெளிச்சத்தைப் பாதையைவிட்டு நகர்த்தி, ரோட்டோரமாய் வீசிப் பார்த்த ரேகா... ஆச்சரியப்பட்டாள்.



யாரும் கண்ணுக்குத் தட்டுப்படவில்லை.

"என்ன சார்... யாரையும் காணோம்? முனகிற சத்தம் மட்டும் கேட்டுட்டிருக்கு..."

"ரேகா..."

"ம்..."

"அந்த 'டார்ச்'சை என் கையில் கொடுங்க."

"ரேகா 'டார்ச்'சை ரத்தினகுமாரிடம் கொடுக்க– அவன் அதை வாங்கிக்கொண்டு ரோட்டின் இடப்பக்கமாய் மண்டியிருந்த புதரை நோக்கிப் போனான்.

"ரேகா... என் பின்னாடி வாங்க... முனகல் சத்தம் இந்தப் பக்கத்திலிருந்துதான் கேட்குது..."

"சார்? ஒரு நிமிடம்..."

"என்ன?"

"ரிவால்வரை தயாரா வைச்சுக்கட்டுமா?"

"ம்... சீக்கிரம்..." ரத்தினகுமார் துரிதப்படுத்த– ரேகா அவசர அவசரமாய் மீண்டும் சூட்கேசைத் திறந்து– அந்த ஜப்பானியத் தனமான குட்டை ரிவால்வரை எடுத்துக்கொண்டாள்.

"ம்...மா...ஆ..."

ஒரு பெண்ணின் முனகல் சத்தம் மெதுவாய் அந்தப் புதருக்குப் பின்னாலிருந்து கேட்டுக்கொண்டிருக்க– ரத்தினகுமார் டார்ச் வெளிச்சத்தைப் புதரில் பாய்ச்சி, இருட்டைக் கழுவினான்.

டார்ச் வெளிச்ச வட்டத்தின் மூன்றாவது கத்தலில்–

குப்புற விழுந்து கிடந்த அந்தப் பெண் தெரிந்தாள். அவள் அணிந்திருந்த சிவப்புச் சேலை நார்நாராய் கிழிபட்டிருக்க– ஜாக்கெட்டின் ஒரு பகுதி முழுசாய் உரிந்து தொங்கியது.

ரத்தினகுமாரும், ரேகாவும் வேகவேகமாய் அவளை நெருங்கி– மெல்ல மல்லாத்திப் போட்டார்கள். அந்தப் பெண் பலகீனமாய்க் கண்களை மலர்த்திப் பார்த்துக் கத்தினாள்.

"அய்யா... உங்களைக் கையெடுத்துக் கும்பிடுறேன்...





என்னை ஒண்ணும் பண்ணிடாதீங்க... நான் உங்க தங்கச்சி மாதிரி..."

"இதோ பாரும்மா..." அவளுடைய தோளைத் தட்டினான், ரத்தினகுமார்."

"என்னைத் தொடாதீங்கய்யா... என்னை விட்டுடுங்கய்யா..."

"ரேகா..."

"சார்..."

"இந்தப் பொண்ணு யாருக்கோ பயந்துபோய் இங்கே வந்து ஒண்டி இருக்கணும்... நீங்க பேசிப் பாருங்க, கொஞ்சம் பயம் தெளியலாம்."

ரேகா, மண்டிப்போட்டு உட்கார்ந்தாள். அந்தப் பெண்ணின் முகத்தைக் கையால் தொட்டுத் திருப்பினாள்:

"இதோ பாரும்மா... பயப்படாதே! உன்னை யாரும் எதுவும் பண்ணிடமாட்டாங்க... மெள்ளமா எழுந்திரிச்சு உட்காரு பார்க்கலாம்..."

ரேகாவின் குரல் கேட்டதுமே... அந்தப் பெண்ணின் உடம்பில் நடுக்கம் மெல்ல மெல்லக் குறைந்தது. கண்களைக் கொஞ்சம் அதிகப்படியாய் மலர்த்தினாள். ரத்தினகுமார் 'டார்ச்' வெளிச்சத்தை அவள் முகத்தில் போட்டான்.

அழகாக இருந்தாள். கலைந்த கேசச் சுருளுக்கு மத்தியில் அவளுடைய உருண்டை முகம் தெரிந்தது. மஞ்சள்நிற முகத்தில் சேற்று தீற்றல்கள் புள்ளிப் புள்ளியாய்த் தெரிய– உதட்டோரம் ஒரு இரத்தக்கோடு வாங்கி இருந்தாள். மார்புகளைப் பொத்திய கைகளில் வளையல்கள் உடைந்திருந்தன.

"நீ யாரம்மா... உம் பேரென்ன?" –ரேகா அந்தப் பெண்ணின் கன்னத்தைத் தட்டி, மெல்லிய குரலில் கேட்க... அவள் தடுமாற்றமாய் எழுந்து உட்கார்ந்தாள். கண்களைப் பரக்கப் பரக்க விழித்துக்கொண்டு சுற்றும் முற்றும் பார்த்தாள். இணறும் குரலில் கேட்டாள்:

"அ...அ...அவங்க போயி...ட்...டாங்களா?"

"யாரு?"

"அ...அ...அந்த மீசை வெ...வெச்ச ஆளும்... இ...இன்னும் நாலைஞ்சு பேரும்..."

"அவங்க உன்கிட்டே தப்பா நடந்துக்கப் பார்த்தாங்களா?"

"ஆ...மா..."

"தப்பா நடந்துகிட்டாங்களா?"

"இ...இல்லே... எ...என்னைத் தொரத்திட்டு வந்தாங்க... நான் அவங்க கைக்குக் கிடைக்காமே... இந்த புதருக்குப் பின்னாடி வந்து விழுந்தேன்..."

"உம் பேரென்ன?"

"நந்தா."

"இதே ஊரா?"

"இல்லே... திருச்சிக்குப் பக்கத்துல இருக்கிற மாயனூர்... எனக்குத் துணையா இருந்த அப்பா செத்துப்போனதும்- வேலை தேடிப் பாறைப்பள்ளம் கிராமத்துல இருக்கிற மாமாகிட்டே வந்தேன். இராத்திரி பத்து மணிக்கு பஸ்சை விட்டுட்டு சோலையார்புரம் பஸ் ஸ்டாண்ட்ல நின்னேன். பாறைப்பள்ளம் போக பஸ்சுக்காகக் காத்திருந்தேன். அந்த நேரத்துலதான் ஒரு மீசைக்காரன் வந்து என்கிட்டே தப்பா பேசினான்.

நான் பயந்துபோய் ஓடினேன். நாலைஞ்சு பேர் இருட்டுல என்னைத் தொரத்த ஆரம்பிச்சாங்க... நான் அவங்க கைக்கு சிக்காம விடிய விடிய ஓடி- கடைசியா ஓடமுடியாம இங்கே வந்து விழுந்துட்டேன்..."

ரேகா, ரத்தினகுமாரை ஏறிட்டாள்.

"வந்ததும் வராததுமா நமக்கொரு வழக்கு சார்..."

புன்னகைத்த ரத்தினகுமார் சொன்னான்: "ரேகா! நான் ஒரு அஞ்சு நிமிடம்... அப்படித் தள்ளி



...கிறேன். நீங்க அந்தப் பொண்ணுக்கு ஒரு மாத்துச் ...சேலையையும் ஜாக்கெட்டையும் கொடுத்து ரோட்டுக்குக் ...ட்டிட்டு வாங்க."

ரேகா செயல்பட்டாள்.

தன் சூட்கேசைத் திறந்து ஒரு சேலையையும் ஜாக்கெட்டையும் உருவி, அந்த பெண்ணிடம் நீட்டினாள். "சீக்கிரமா இதைக் ...டிக்கிட்டு வெளியே வாம்மா."

அந்தப் பெண் வாங்கிக்கொண்டாள். ஒரு ஐந்து நிமிடம் ...த்து தொண்டின நடையோடு புதருக்குப் பின்புறமிருந்து ...வளிப்பட்டாள்.

ரத்தினகுமார் அருகே வந்து கேட்டான்.

"பாறைப் பள்ளம் கிராமத்துல உன் மாமா யாரோ ...ருக்கிறதா சொன்னியே... அவர் பேரென்ன?"

"லெட்சுமய்யா..."

ரத்தினகுமார் யோசித்தான்: "எந்த லெட்சுமய்யா?"

"அவருக்குப் பருத்திக்கொட்டை வியாபாரம்."

"மாரியம்மன் கோவிலுக்குப் பக்கத்தில இருக்காரே... அவரா!"

"அவர்தாங்க."

"அவரைப் பார்க்கிறதுக்கு இராத்திரி நேரத்துலதான் வரணுமா?"

"நான் திருச்சியிலிருந்து புறப்பட்ட பஸ் கரூருக்குப் ...க்கத்துல நின்னுபோயி... வேறு பஸ் கிடைக்க இங்கே ...ர்றதுக்குள் இராத்திரி ஆயிடுச்சு..."

"உம் பேரென்ன சொன்னே?"

"நந்தா..."

"உன்னாலே மூணு கிலோமீட்டர் தூரம் நடக்க முடியுமா?"

"என்னால முடியாதய்யா... அந்த மிருகங்ககிட்ட இருந்து ...பிக்கிறதுக்காக விடிய விடிய ஓடி ஒளிஞ்சு உட்கார்ந்ததுல

உடம்பெல்லாம் புண்ணாட்டம் இருக்கு... என்னால நடக்கமுடியலைங்கிற காரணத்துக்காக என்னை விட்டுட்டு போயிடாதீங்கய்யா..."

கையெடுத்துக் கும்பிட்டாள்.

ரத்தினகுமார், ரேகாவின் பக்கமாய்த் திரும்பினான்:

"என்ன ரேகா பண்ணலாம்?"

"பாறைப்பள்ளத்துக்குப் போற முதல் பஸ் எத்தனை மணிக்கு சார்?"

"ஆறு மணிக்கு."

"ஆறு மணிக்கு சரியா வந்துடுமா?"

"வந்துடும்."

ரேகா, 'டார்ச்' வெளிச்சத்துக்குக் கீழ் தன் மணிக்கட்டை தாழ்த்தி கடிகாரத்தைப் பார்த்தாள்.

"மணி அஞ்சேகால் ஆகுது சார்... ஒரு முக்கால் மணி நேரந்தானே? காத்திருந்து, பஸ்சிலே போயிடலாம்."

"சரி... அந்தப் பெண்ணை மெள்ளமா நடத்திப் பஸ் நிறுத்தத்துக்குக் கூட்டிட்டு வாங்க" ரத்தினகுமார் சொல்லிக்கொண்டே 'டார்ச்' வெளிச்சத்தோடு முன்னால் போனான்.

இருட்டுச் சாயத்தை ஏற்றி ஒற்றியெடுத்தபடி 'டார்ச்' வெளிச்சம் வழிகாட்ட– மூன்று பேரும் மவுனமாய் நடந்தார்கள். ரேகா அந்த அமைதியைக் கலைத்துக்கொண்டு நந்தாவிடம் கேட்டாள்.

"நீ பாறைப்பள்ளம் கிராமத்துக்கு வர்றது உன் மாமா வெட்சுமய்யாவுக்குத் தெரியுமாம்மா?"

"தெரியாது."

"நீ படிச்சிருக்கியா?"

"ம்... எஸ்.எஸ்.எல்.சி வரை படிச்சிருக்கேன்."

"உன்கிட்டே தப்பா நடந்துக்கிட்ட ஆட்களை மறுபடியும் பார்த்தால் உன்னாலே அடையாளம் காட்ட முடியுமா?"



"அந்த மீசைக்காரனை மட்டும் அடையாளம் காட்ட முடியும்" நந்தா சொல்ல... ரேகா அடுத்த கேள்வியைக் கேட்பதற்காக வாயைத் திறந்த நேரம்...

"ஜல்... ஜல்... ஜல்..."

அந்தச் சத்தம் கேட்டது.

மாடுகளின் கழுத்தில் கட்டப்பட்டிருக்கும் சலங்கைச் சத்தம். அந்தச் சத்தத்தைத் தொடர்ந்து ஒரு அரிக்கேன் விளக்கு, சாலையின் மையத்தில் ஆடிக்கொண்டே வந்தது.

"ரேகா... ஏதோ ஒரு மாட்டு வண்டி வருது..."

"உங்க ஊர்தானே? நிறுத்தி 'லிப்ட்' கேட்டுப் பாருங்க சார்" மூன்று பேரும் சாலையோரமாய் ஒதுங்கி நிற்க– 'ஜல்ஜல்' சத்தமும், அரிக்கேன் விளக்கும் கொஞ்சம் கொஞ்சமாய் அவர்களை நெருங்கிக்கொண்டிருந்தன.

சரியாய் இரண்டு நிமிடம்.

மாட்டு வண்டி, அருகாமைக்கு வந்தது... நின்றது. வண்டியில் யாரோ மசமசப்பாய் உட்கார்ந்து குரல் கொடுத்தார்கள். குரலில் பக்கா கிராமியத்தனம்.

"ஏலேய்... ரோட்ல ஆரது?"

ரத்தினகுமார் 'டார்ச்' வெளிச்சத்தோடு வண்டியோட்டியை நெருங்கினான். மெல்லிய குரலில் சொன்னான்: "பெரியமங்கலம் முத்துக்குமாரோட தம்பி நான்... பட்டணத்திலிருந்து வர்றேன்... வண்டியில யாரு?"

ரத்தினகுமாரின் குரலைக் கேட்ட அடுத்த நிமிடமே அந்த வண்டியோட்டி பதற்றமாய்க் கீழே குதித்துத் தலையில் சுற்றியிருந்த துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக்கொண்டான்: "சாமி... மன்னிக்கனும். நான் செங்கல் சூளை பொன்னானுங்க... இராத்திரி வண்டி லோடுக்குப் போயிருந்ததுங்க..."

ரத்தினகுமார் குறுக்கிட்டான்:

"சரி... நீ இப்ப எங்கே போறே?"

"நம்ம கிராமத்துக்குத்தாங்க."

"மூணு பேர் இருக்கோம்... வண்டியில ஏறிக்கலாமா?"

"என்ன சாமி... அப்படிக் கேட்டுட்டீங்க? வந்து உட்காருங்க.. போகலாம்" சொன்ன பொன்னான், துண்டை அவிழ்த்து- வண்டியின் உட்பரப்பிலிருந்து மண்ணைத் தட்டிவிட்டான்.

முதலில் நந்தாவைக் கொஞ்சம் சிரமப்பட்டு வண்டியில் ஏற்றிவிட்டு அவளுக்குப் பின்னால் ரேகாவும், ரத்தினகுமாரும் ஏறிக்கொண்டார்கள். பொன்னான் கடைசியாய்த் தாவி ஏறியதும், வண்டி 'ஜல் ஜல்' சத்தத்தோடு புறப்பட ஆரம்பித்தது.

"சாமி..."

"என்ன பொன்னான்?"

"ரெண்டு பொண்ணும் உங்கக்கூட வேலைப் பார்க்கிறவங்களா சாமி."

"ஆமா."

"பட்டணத்திலிருந்து இப்பத்தான் வர்றீங்களா?"

"ஆமா."

"ராயப்பனோட குடும்பத்துக்கு நேர்ந்த கதியைப் பத்திரிகைகளில் பார்த்தீங்களா சாமி?"

"ம்... பார்த்தேன்."

"சாகக்கூட வேறு நேரமில்லாமே... தூங்கிட்டிருக்கும்போதே அத்தனை உயிரும் பஸ்பமா போயிடுச்சு சாமி..." "இந்தக் காரியத்தை யார் பண்ணி இருப்பாங்கன்னு ஊர் ஜனங்க பேசிக்கிறாங்க பொன்னான்?"

"நாக்கு வளைஞ்ச போக்குல விதவிதமா பேசுறாங்க சாமி... போலீசோட சந்தேகம் பூராவும் சோலையார்புரம் மிராசு மேலத்தான் இருக்கு..."

"நீ என்ன நினைக்கிறே?"

"ராயப்பனுக்கு இந்தக் கிராமத்துல மட்டுமில்ல சாமி...



வெளிக் கிராமத்திலும் விரோதிங்க இருக்காங்க. யாரைச் சொல்றது?"

வண்டி வேகம் பிடித்தது. கிராமத்துக் கிழக்கு திசை, செம்மண் நிறத்தில் தெரிய- சேறு நிரம்பிய வயல்களின் சர மணம் நாசியை நிறைத்தது. கிராமத்து வேப்ப மரங்களில் பறவைகள் குடும்பம் குடும்பமாய் விழித்துக்கொண்டு கத்தின. தாறு நடவுக்கு சாலையோரமாய்ப் போய்க்கொண்டிருந்த பெண்கள்- வண்டியைத் திரும்பிப் பார்த்துவிட்டு "மயிலக்கோவ்... வண்டில போறது யாரு? ரெண்டு சேல தெரியுது" என்று குரல் கொடுத்தார்கள்.

அவிழ்ந்த கொண்டைகளை முடித்துக்கொண்டே- தூக்கம் கலைந்த பெண்கள்- சாணி நீர் கரைத்து பாத்திரத்தோடு வந்து வாசலைத் தெளிக்க ஆரம்பித்தார்கள்.

வண்டி, தெருவின் கோடியில் திரும்பி- அந்த விஸ்தார வீட்டின் முன்னால் நின்றது.

ரத்தினகுமாரும், ரேகாவும் வண்டியிலிருந்து கீழே இறங்கினார்கள். நந்தா இன்னமும் உள்ளேயே உட்கார்ந்திருந்தாள். ரத்தினகுமார், பொன்னானிடம் திரும்பினான்.

"பொன்னா?"

"சாமி..."

"இந்தப் பொண்ணை லெட்சுமய்யா வீட்டுல கொண்டு போய் விட்டுடு..."

பொன்னான், முகத்தில் ஆச்சரியம் காட்டினான்; "லெட்சுமய்யாவா? எந்த லெட்சுமய்யா சாமி?"

"பருத்திக்கொட்டை வியாபாரம் பண்ணுறாரே அவர்தான்."

"என்ன சாமி? உங்களுக்கு விசயம் தெரியாதா? அந்த லெட்சுமய்யா செத்து இன்னிக்கு மாசம் ரெண்டாகப்போகுதே! பெண்டாட்டி- குழந்தை குட்டின்னு எந்த உறவுமே இல்லாத அந்த மனுசனுக்கு நம்மப் பள்ளிக்கூடத்து வாத்தியாரய்யா தானே கொள்ளி போட்டாரு."

ரத்தினகுமார் ஒரு திடுக்கிடலோடு- வண்டிக்குள் உட்கார்ந்திருந்த நந்தாவைப் பார்த்தான்.

## 5

நந்தா, கண்களில் திரண்ட நீரோடு வண்டியிலிருந்து மெல்லக் கீழே இறங்கினாள். பொன்னானைப் பார்த்து நடுங்குகிற குரலில் கேட்டாள்:

"என்னோட மாமா லெட்சுமய்யா இறந்துட்டாரா... எப்போ?"

"ரெண்டு மாசமாச்சும்மா! சிறுநீறு சரியா பிரியலைன்னு ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோனோம்... ரெண்டு நாளு இருந்தாரு. மூணாவது நாளு கண்ணை மூடிட்டார். அவரோட சொந்த ஜனம் யார் எங்கே இருக்காங்கன்னு தெரியாததாலே நம்ம பள்ளிக்கூடத்து வாத்தியார்தான் கொள்ளி போட்டார். லெட்சுமய்யா வீட்டுக்குக்கூட வேற யாரோ குடி வந்துட்டாங்க போலிருக்கு..."

நந்தா கண்களில் வழியும் நீரோடு ரத்தினகுமாரை ஏறிட்டாள்: "சோலையார்புரத்துக்குப் போக அடுத்த பஸ் எத்தனை மணிக்கு வரும்ங்க?"

"ஏன், திரும்பவும் ஊருக்குப் போறியா?"

"ஆமாங்க... வேற வழி? மாமாவே போன பின்னாடி இந்த ஊரில் எனக்கு என்னங்க வேலை? நான் புறப்படுறேன்."

ரேகா குறுக்கிட்டு ஏதோ சொல்வதற்குள், பின்பக்கம் அந்த ஆண் குரல் கேட்டது: "என்னடா ரத்தினம்... கிராமத்துக்குப் புறப்பட்டு வர்றேன்னு ஒரு கடுதாசு போடக்கூடாது? போன் பண்ணி சொல்லி இருந்தா வண்டியைக் கட்டிட்டு வந்திருப்பேனே... என்னடா பொன்னான்... தம்பிய நீதான் கூட்டிட்டு வந்தியா? உள்ளே வா! காப்பி தண்ணி குடிச்சிட்டுப் போவியாம்!"



பொன்னான் அவசர அவசரமாய் மறுத்து- நுகத்தடிமேல் காலை வைத்து, வண்டியில் ஏறினான்: "இல்லீங்க சாமி... நான் வூட்டுக்குப் போறேன். இராத்திரி முழுசும் வெளியே சுத்திட்டிருந்தேன். வீட்டுல பொஞ்சாதி காத்திட்டிருப்பா... வாரேன் சாமி" சொல்லிக்கொண்டே மாடுகளை விரட்டினான்.

"விடியற நேரத்துல பொண்டாட்டி ஞாபகம் வந்துடுச்சாக்கும்?" என்று சொல்லி நிறுத்திய அந்த இளைஞனைப் பார்த்தாள், ரேகா. ஏறக்குறைய ரத்தினகுமாரின் சாயலில் இருந்தான். நிறத்தில் மட்டும் கொஞ்சம் தவறிப்போயிருந்தான்.

சீப்புக்கு அடங்காத தலைக் கேசம் சிலும்பலாய்க் காற்றில் பறந்தது. உரமேறிய உடம்பில் கைகளும், கால்களும்- முண்டா பனியன், நாலு முழ வெள்ளை வேட்டியிலும் கம்பீரம் காட்டினான்.

ரத்தினகுமார், ரேகாவை உசுப்பினான்: "என்னங்க ரேகா... அப்படிப் பார்க்கிறீங்க? இவர்தான் என் அண்ணன் முத்துக்குமார்."

"வணக்கம்!" -ரேகா கைகளைக் குவித்தாள்.

"வணக்கம்! ரத்தினம்... யாருடா இந்தப் பொண்ணுங்க?"

"அண்ணே! இவங்க ரேகா. என்னோட துறை போலீஸ் அதிகாரி. அந்தப் பொண்ணு பேரு நந்தா. உள்ளே வாங்கண்ணே! எல்லாத்தையும் சொல்றேன்."

எல்லோருமாய் போக-

நந்தா மட்டும் தயங்கி நின்றாள்.

"அட... வாம்மா... ஏன் நின்னுட்டே?" முத்துக்குமார் கேட்டான்.

"நான் ஊருக்குப் போகணும்..."

"ஊருக்குப் போறியா? டேய் ரத்தினம்... இந்தப் பொண்ணு என்னமோ சொல்லுது..."

ரேகா, நந்தாவை நெருங்கி அவளுடைய தோளைத்

தொட்டான்: "நீ ஊருக்குப் போகலாம். மொதல்ல உங்
வாம்மா."

முன்னால் நடந்துபோய்க்கொண்டிருந்த ரத்தினகும
முத்துக்குமாரிடம் நந்தாவைப் பற்றிச் சுருக்கமாய்ச் சொ
முடித்தான். முத்துக்குமார் ஆச்சரியப்பட்டான்:

"சோலையார்புரம் நல்ல ஊராச்சே! அங்கேயும், இ
மாதிரி ஆசாமிங்க இருக்காங்களா? ஆளனுப்பி அ
மீசைக்காரன் யாருன்னு விசாரிக்கப் பார்ப்போம்... அ
பொண்ணு பேர் என்ன சொன்னே?"

"நந்தா."

"அப்பா, அம்மா இல்லாத பொண்ணா?"

"ஆமா."

முத்துக்குமார் ஒரு சின்னப் புன்னகையோடு நந்தா
பக்கம் திரும்பினான். "இதோ பாரும்மா நந்தா... நீ இ
ஊருக்கு வேலை தேடித்தானே வந்தே?"

"ஆமா."

"நான் உனக்கு வேலை தர்றேன், வா!"

ரத்தினகுமார் திடுக்கிட்டுப்போய் முத்துக்குமாரை
பார்த்தான்: "என்னண்ணே இது! நீபாட்டுக்கு வே
தர்றேன்னு சொல்லிட்டே..... அந்தப் பொண்ணுக்கு இ
என்ன வேலை கொடுப்பீங்க?"

முத்துக்குமார் சிரித்தான். "நம்ம பண்ணைக் கணக்
பிள்ளைக்கு வயசாயிடுச்சு தம்பி... சாயந்தரம் அஞ்சு மணியான
போதும், கண்பார்வை சரியா தெரியாம கஷ்டப்படுற
அவருக்கு உதவியா இந்த வீட்டுல இருந்துட்டுப் போகட்டுமே
பார்த்தா கொஞ்சம் படிச்சப் பெண்ணாட்டமும் தெரியுது

நான்கு பேரும் உள்ளே வந்தார்கள். ரேகா பார்வையை
சுழற்றிக்கொண்டே போனாள்.

அந்த பெரிய வீடு பழங்கால வடிவமைப்பில் இருந்த



தேக்குக் கதவுகள், சட்டி மரத்தூண்கள். மையத்தில்– உயரத்திலிருந்து தொங்கிக்கொண்டிருந்த சரவிளக்குகள், வளைந்துபோகும் மாடிப்படிகள்.

ரேகா, ரத்தினகுமாரிடம் திரும்பினாள். கிசுகிசுப்பான குரலில் கேட்டாள்: "வீடு ரொம்பவும் பிரமாதமா இருக்கு சார்... இவ்வளவு பெரிய வீட்டுல உங்க அண்ணன் மட்டும்தான் தனியா இருக்காரா?"

"ஆமா."

"பயமா இருக்காது?"

"என்ன பயம்? பண்ணை ஆட்கள் இராத்திரிப் பத்து பதினொரு மணி வரை வேலை செய்வாங்க... விடிகாலை அஞ்சு மணிக்கெல்லாம் வந்துடுவாங்க."

"உங்க அண்ணனுக்கு இன்னும் கல்யாணம் ஆகலை?"

"ஊகும்... நல்லப் பொண்ணாப் பார்த்திட்டிருக்கோம்... கிடைச்சதுமே கல்யாணம்தான்... வாங்க ரேகா... நாற்காலியிலே வந்து உட்காருங்க... அஞ்சு நிமிடத்துல காப்பி வந்துடும்..."

வட்டமாய்ப் போடப்பட்டிருந்த பிரம்பு நாற்காலிகளில் மூன்று பேரும் உட்கார– நந்தா உட்காரத் தயங்கினாள். முத்துக்குமார் சொன்னான்:

"நீயும் உட்காரும்மா... உனக்கு வேலை தரப்போறேன்னு சொன்னதும் எனக்கு மரியாதை காட்டுறியா? வேண்டாம்; உக்காரு."

நந்தா, தயக்கமாய் உட்கார்ந்தாள்.

முத்துக்குமார், ரத்தினகுமாரிடம் திரும்பினான்: "அப்புறம் தம்பி... சொல்லு, என்ன விசயமா ஊருக்கு வந்திருக்கே?"

"ராயப்பன் குடும்பத்தை சுட்டுப் பொசுக்கின சம்பவம் மூலமா இன்னிக்கு நம்மக் கிராமத்தோட பேரு தமிழ்நாடு பூராவும் பிரபலமாகி இருக்கு அண்ணே... அந்த வழக்கை விசாரிக்கிற பொறுப்பை கமிஷனர் என்கிட்ட ஒப்படைச்சி

இருக்கார். ஒரு வாரம், பத்து நாளில் நான் குற்றவாளி களைக் கண்டுபிடிச்சு..."

ரத்தினகுமார் சொல்லச் சொல்ல- முத்துக்குமார் சிரித்தான்.

"ஏன் அண்ணே சிரிக்கிறே?"

"சிரிக்காமே என்ன பண்ணுறது தம்பி? ராயப்பனுக்கு வேண்டாதவங்க பாதி பேர் இந்தக் கிராமத்துல இருக்காங்க.. சம்பவம் நடந்து மூணு நாள் ஆயிடுச்சு... உள்ளூர் போலீஸ் இரவும் பகலும் அலைஞ்சும் ஒருத்தரைக்கூட கைது பண்ண முடியலை... ஊரில் எவனைப் பார்த்தாலும் மாடு மாதிரி இருக்கான்... போலீஸ் விசாரணைன்னு போனா வாயைத் திறக்கிறதில்லையாம்..."

"மத்தவங்களை விடண்ணே! நான் உங்களைக் கேக்கிறேன். ராயப்பனோட குடும்பத்தைக் கொளுத்தின ஆசாமிங்க யாரா இருக்கும்?"

"என் ஊகப்படி சோலையார்புரம் மிராசு ரத்தின பூபதியோட ஆட்களாகத்தான் இருக்கணும். அவனுக்கும் ராயப்பனுக்கும்தான் ரொம்ப நாளாவே ஜென்மப் பகை..."

ரத்தினகுமாரிடம் ரேகா திரும்பினாள்: "சார்! இன்னிக்கு சோலையார்புரம் போய் அந்த ரத்தினபூபதியை விசாரித்துப் பார்த்துடலாமா?"

முத்துக்குமார் இடைமறித்தான்:

"அவன் ரொம்பவும் மோசமான ஆளும்மா... நீங்க ரெண்டு பேரும் அவனை விசாரிக்கப் போனாலே அவனுக்குக் கோபம் வந்துடும்... அவனோட மூர்க்கமான குணத்துக்கு ஒரு உதாரணத்தைச் சொல்லட்டுமா?"

"சொல்லுங்க."

"ஊர்ல எல்லாரும் மாட்டுப் பண்ணை, கோழிப் பண்ணை வைச்சி வந்தாங்க... அந்த ரத்தினபூபதி தன்னோட தோட்டத்துல ஒரு நாய்ப் பண்ணையையே வைச்சு நடத்துறான்... விதவிதமான சாதியில நூத்துக்கணக்குல



நாய்ங்க... மாட்டு இறச்சியைப் போட்டு மதமதன்னு வளர்த்து வைச்சிருக்கான்... தனக்கு வேண்டாத ஆளுன்னு தெரிஞ்சா போதும்... அஞ்சாறு நாய்களைவிட்டுத் தொரத்தியே கொன்னுடுவான், அந்தப் பாவி..."

ரேகா புன்னகைத்தாள்:

"ரொம்ப இண்ட்ரஸ்டிங்... அந்த ஆளையும், அவன் வைச்சிருக்கிற நாய்ப் பண்ணையையும் எனக்கு பார்க்கணும் போலிருக்கு சார்..."

"குளிச்சு, சாப்பிட்டுக் கிளம்பிடுவோம்."

ரத்தினகுமார் உற்சாகமாய்ச் சொல்ல- முத்துக்குமார் பதற்றமாய்க் குறுக்கிட்டான்: "தம்பி! அவனுக்கு ஆத்திரம் வரும்படியா எதும் பேசிடாதே! நிதானமா பேசு... அவன் ஆத்திரப்பட்டாலும், நீ ஆத்திரப்படாதே!"

"சரிண்ணே!" அவன் சொல்லிக்கொண்டிருந்தபோதே- ஒரு வேலைக்காரப் பெண் தட்டில் ஏந்திய காப்பி தம்ளர் களோடு வந்தாள். எல்லோரும் ஒவ்வொரு தம்ளராய் எடுத்துக்கொண்டார்கள்.

ஒரு வாய் காப்பி விழுங்கிய ரத்தினகுமார்- அதுவரை ஒன்றும் பேசாமல் உட்கார்ந்திருந்த நந்தாவை ஏறிட்டான்:

"நந்தா..."

அவள் தலையை உயர்த்தினாள்.

"இந்த வீட்டுல வேலைப் பார்க்க உனக்குப் பிரியமா?"

"ம்..."

"உனக்குப் பிடிச்சிருந்தா இங்கே இருக்கலாம்... இது ஒண்ணும் கட்டாயமில்லை. நீ இந்தக் கிராமத்துக்கு வேலை தேடி வந்தவங்கிற ஒரே காரணத்துக்காகத்தான் அண்ணன் உனக்கு வேலை போட்டுக் கொடுத்திருக்கார்."

"ரொம்பவும் நன்றி."

அவள் கை குவித்தாள். கண்களில் நீர் நிரம்பி- கண்ணாடித் தான் மாதிரி மினுமினுத்தது-

# 6

குளித்துச் சாப்பிட்டு பத்து மணிக்குமேல் புறப்பட்டார்கள் ரத்தினகுமாரும், ரேகாவும். வீட்டுக்கு வெளியே பரவி இருந்த 'சிமெண்டு' முற்றத்தில்– நெல்மணிகளைக் கொட்டிப் பரப்பி இருந்தார்கள். கங்கடிச் சேலையும் உயர்த்திப்போட்ட கொண்டையுமாய் இருந்த பண்ணைப் பெண்கள், கால்களால் நெல்லைக் கெந்தி, உலர்த்திக்கொண்டிருந்தார்கள்.

கண்ணாடி போட்ட பெரியவர் ஒருத்தர், நீளமான நோட்டுப் புத்தகத்தோடும், காதில் சொருகிய பென்சிலுமாய் நின்றிருக்க– அவருக்குக் கொஞ்சம் தள்ளி நந்தா மிரட்சியோடு தெரிந்தாள்.

சுற்றுச்சுவர் 'கேட்'டைக் கடந்துகொண்டே ரேகா கேட்டாள்: "என்ன சார்! அவர்தான் பண்ணையோட கணக்குப் பிள்ளையா?"

"ஆமா. ரெண்டு தலைமுறையா அவர்தான் எங்க வீட்டுக் கணக்குப்பிள்ளை... அவருக்கு உதவியாகத்தான் நந்தா போயிருக்கா."

"நந்தாவைக் காப்பாத்திக் கூட்டிவந்தது... அவளுக்கு உங்க அண்ணன் வேலைப் போட்டுக் கொடுத்தது... எல்லாமே கனவில் நடந்த மாதிரி இருக்குது... நந்தாவுக்கு அதிருஷ்டம் இருக்கு சார்! இல்லேன்னா அவ நம்ம கண்ணுல பட்டிருக்கமாட்டா..."

பேசிக்கொண்டே வந்தார்கள்.

வெளியே காத்திருந்த 'பைக்'கை நெருங்கினான், ரத்தினகுமார். "பைக்குல எம்பின்னாடி உட்கார்ந்துட்டு வர உங்களுக்கொண்ணும் ஆட்சேபனை இல்லையே, ரேகா?"

"இல்லை."

'பைக்'கில் பரவி 'கிக்'கரை உதைத்தான், ரத்தினகுமார்.



அது அடர்த்தியாய்ப் புகையைக் கக்கி 'ந்தப்... ந்தப்...' என்றது. தொடர்ந்து ரத்தினகுமாரின் முதுகின்மேல் தன் உடம்பின் எந்த அவயமும் படாமல் அதி கவனமாக 'பில்லியனி'ல் ஏறி உட்கார்ந்தாள், ரேகா.

'பைக்' நகர்ந்த விநாடி– வீட்டுக்குள்ளே இருந்து ஓடிவந்த முத்துக்குமார், தொண்டையை எக்கிக் குரல் கொடுத்தான்: "ஜாக்கிரதையா போயிட்டு வாங்க... மிராகிட்டே நிதானமா பேசுங்க... மத்தியான சாப்பாட்டுக்கு வந்துடுங்க..."

"ம்..."

தலையாட்டிக்கொண்டே பைக்கைக் கிளப்பினான், ரத்தினகுமார். வெயில் அந்நேரத்துக்கே தலைக்குமேல் அபாரமாய் இருந்தது. புழுதித் தெருக்களில் ஜனங்கள் ஓரமாய் நடந்து போனார்கள். வெற்றுடம்பு, அரையில் கட்டின வேட்டியோடு சிலர் சைக்கிளில் வேகமாய்ப் போனார்கள்.

'பைக்', நிமிட நேரத்தில்– கிராமத்தை முடித்துக்கொண்டு நீளமான கப்பி சாலையில் ஓடியது. இரண்டு பக்கமும் வரிசையாய்ப் பாக்கு மரங்கள் பசேலென்று ஓடோடி வர– ரேகா சொன்னாள்:

"கிராமம் செழிப்பாகத்தான் இருக்கு."

"எல்லாம் சமீபத்திய மழையோட கைங்கரியம்... இல்லேன்னா எல்லாமே காய்ஞ்சு கிடக்கும்..." சொல்லிக்கொண்டே 'பைக்'கைத் திருப்பத்தில் வளைத்தபோது– ரேகாவின் தோள்பட்டை லேசான கதகதப்போடு மெத்தென்று அவன் முதுகில் மோதியது.

"சார்... உங்கக்கிட்டே தனிப்பட்ட ஒரு கேள்வியைக் கேக்கலாமா?"

"ம்... தாராளமா கேளுங்க."

"உங்களுக்குக் கிராமத்துல இவ்வளவு வசதி இருக்கு. நீங்க எதுக்காக சென்னைக்கு வந்து, போலீஸ் துறையில் வேலைப் பார்க்கணும்?"

"நான் போலீஸ் துறையில் வேலை பார்க்கணும்கிறது என் அம்மா, அப்பாவோட ஆசை... அம்மா உயிரோடு இருக்கிறவரை அதையே சொல்லிட்டே இருப்பாங்க..."

"உங்க அம்மா எப்போ இறந்தாங்க?"

"ரெண்டு வருடத்துக்கு முந்தி."

"அப்பா..."

"அவரைத்தான் தேடிட்டிருக்கோம்."

திடுக்கிட்டாள், ரேகா. "தேடிட்டிருக்கீங்களா? என்ன சார் சொல்றீங்க?"

"ஆமா ரேகா... அம்மா இறந்த அதிர்ச்சி அப்பாவோட மனநிலையைப் பாதிச்சிடுச்சி... எந்நேரமும் அம்மா பேரைச் சொல்லிக்கிட்டே வீட்டுத் திண்ணையில உட்கார்ந்திருப்பார்... திடீர்ன்னு ஒருநாள் காணாமே போயிட்டார்... எல்லா இடத்திலேயும் தேடிப் பார்த்தோம்... கோயமுத்தூர்ல யாரோ பார்த்ததா சொன்னாங்க. மதுரையில பார்த்ததா சொன்னாங்க. எங்கே தேடியும் கிடைக்கலை. அண்ணனும் நானும் இன்னும் முயற்சி பண்ணிட்டிருக்கோம்... அப்பா கிடைச்சபின்தான் கல்யாணம் பண்ணிக்குவேன்னு அண்ணன் சொல்லிட்டார். அண்ணனுக்குக் கல்யாணம் நடக்கணும்... அதுக்காகவாவது சீக்கிரத்திலே அப்பா கிடைக்கணும்..."

"அய்யோ..."

ரேகா சொல்ல- பைக்கின் வேகத்தைக் குறைத்துக்கொண்டே ரத்தினகுமார் திரும்பிப் பார்த்தான்: "இதைவிட ஒரு வேதனையான விசயத்தைச் சொல்லட்டுமா ரேகா? சென்னை அரசாங்க ஆஸ்பத்திரிக்கு ஏதாவது ஒரு அநாதைப் பிணம் வந்தா... அங்கே இருக்கிற சிப்பந்தி எனக்கு உடனடியா தகவல் தருவான். நான் உடனே போய் 'அது என் அப்பா தானா?'ன்னு பார்த்துட்டு வருவேன். அதேமாதிரி மதுரை, கோயமுத்தூர், திருச்சி இன்னும் பல ஊர்களில் இருக்கிற ஆஸ்பத்திரிகளுக்கெல்லாம் எங்க அப்பாவோட படத்தைக் கொடுத்து வைச்சிருக்கோம்.



அவரோட பிணமாவது எங்களுக்குக் கிடைக்கணும்கிற ஆர்வத்துலதான் நாங்க இருக்கோம்."

"உங்க மனசுக்குள்ளே இவ்வளவு பெரிய துக்கம் இருக்கும்னு நான் கொஞ்சம்கூட நினைச்சுப் பார்க்கலை சார்..."

"இல்லை ரேகா! அந்தத் துக்கமெல்லாம் எனக்கும் சரி... என் அண்ணனுக்கும் சரி... மறந்துபோச்சு... எங்கப்பா உயிரோடு இருப்பாருங்கிற நம்பிக்கையே எங்களுக்கு இல்லை. அம்மாவும், அப்பாவும் நான் போலீஸ் துறையில உத்தியோகம் பார்க்கணும்ன்னு ஆசைப்பட்டாங்க. அவங்க ஆசைப்பட்ட மாதிரியே வேலைப் பார்த்துட்டிருக்கேன்."

பைக், சோலையார்புரத்தை நெருங்கிக்கொண்டிருந்தது. கொஞ்சம் தொலைவில் தெரிந்த சோலையாற்றின் நீர்ப்பரப்பும்- அணையின் முதுகும் ரேகாவை ஈர்த்தன.

"சோலையார் அணை பெரிய அணையா சார்?"

"சுமாரான அணை."

"ரத்தினபூபதிகிட்டே விசாரணை முடிஞ்சதும் அணைக்குப் போயிட்டுப் போகலாமா சார்?"

"ம்... போலாம்."

பைக், சோலையார்புரத்தின் குறுகலான தெருக்களில் ஓடி- உயர உயரமாய் அசோக மரங்கள் குத்திட்டு நின்ற அந்த பங்களா முன்னே மவுனமானது.

கூண்டுக்குள் இருந்த காவலாளி எட்டிப் பார்த்து, சாவதானமாய் நடந்து வந்து அவர்களை நெருங்கினான்:

"யார் சார் வேணும்?"

"ரத்தினபூபதியைப் பார்க்கணும்."

"நீங்க யாரு?"

"சென்னை கிரைம் பிராஞ்ச் போலீஸ்... மொதல்ல கேட்டைத் திறந்துவிடு."

காவலாளி தயங்கிக்கொண்டே- அந்த இரும்புக் கிராதியிட்ட





கேட்டைக் கொஞ்சமாய்த் திறந்துவிட- அதன் இடுக்கில் 'பைக்' நுழைந்து- 'தட்தட்' என்று சப்தித்து, போர்டிகோவில் போய் மீண்டும் அமைதியானது.


ராணி முத்து **சந்தா விவரம்**

| | |
|---|---|
| இரண்டு ஆண்டு | ரூ. 275 |
| ஒரு ஆண்டு | ரூ. 150 |
| ஆறு மாதம் | ரூ. 80 |

**வெளிநாடுகள்**

| | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 825 |
| ஆறு மாதம் | ரூ. 475 |

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

மேலாளர்,
"ராணி முத்து",
சென்னை-600 007.


ரேகா, பார்வையில் பங்களாவைக் கழுவிக் கொண்டே கீழே இறங்கினாள். அரண்மனைத்தனமான பங்களா. அதன் மேற்பரப்புச் சுவர் பூராவும் மனசுக்குள் ஒரு பயத்தைக் கிளப்புகிற செங்காவி நிறச் சுண்ணாம்பு பூசப்பட்டு இருந்தது. எங்கோ தொலைவில் நாய்கள் குரைக்கும் சத்தம் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்க- முத்துக்குமார் சொன்ன நாய்ப்பண்ணை அதுவாகத்தான் இருக்க வேண்டும் என்று ரேகா நினைத்துக் கொண்டாள்.

பைக்கை நிறுத்திவிட்டு, வாசல்படி ஏறிய ரத்தினகுமாரை- சினிமாவில் வரும் அடியாள் மாதிரி பலவண்ண பனியனும், கோடு கிழித்த லுங்கியும், மொட்டைத் தலையுமாய் இருந்த ஒருவன் வேகவேகமாய் நெருங்கினான்.

"உங்க பேர் ரத்தினகுமார்தானே?"

"ஆமா."

"அய்யா உங்களைக் கூப்பிடுறார்... எம்பின்னாடி வாங்க" சொல்லிவிட்டுச் திரும்பி நடக்க, ரத்தினகுமாரும் ரேகாவும் அவனைத் தொடர்ந்தார்கள். 'பாலிஷ்' செய்யப்பட்ட கடப்பைக் கற்கள் பதித்த வராந்தாவில் நிமிட நேரம் நடந்து- இரத்த நிற ஜன்னல் திரைகள் அசைந்துகொண்டிருந்த அறைக்குள் நுழைந்தார்கள்.

கூட்டிவந்தவன், வெளியே நின்றுகொண்டான்.

ரேகாவின் மனசுக்குள் ஒரு பயம், "தடக் தடக்" என் நொண்டியது. ரத்தினகுமாரின் பின்னால் லேசாய் வியர்த் கொண்டு போனாள்.

வாங்க தம்பி..." –கனமான குரலில் விஷமத்தோ வரவேற்ற ரத்தினபூபதியைத் தன் அகலமான கண்கள மெல்ல ஏறிட்டாள், ரேகா.

ரத்தினபூபதி நாற்பது வயதுகளின் ஆரம்பத்தில் இருந்தா முகத்தில் மீசை பிரதானமாய்த் தெரிந்தது. கோடு கிழி மாதிரியான சின்னக் கண்கள். மோவாயிலும், கன்னங்களி சதை காய்த்துத் தொங்கியது. தன்னுடைய தொண்ணு கிலோ உடம்பை– ஒரு மஸ்லின் ஜிப்பாவுக்குள் சிரமமா திணித்திருந்தார். சுண்டுவிரல் பருமனில் தங்கச்செயின் ஒ சிவன் கழுத்தில் அசைகிற பாம்பு மாதிரி விசுவாசமா புரண்டது.

"உட்காருங்க தம்பி... நீங்களும் இந்தப் பொண்ணு சென்னையிலிருந்து வந்த விசயம் ஒரு மணி நேரத்து முன்னாடியே எனக்குத் தெரியும். நீங்க உடனடியாஎன்ன பார்க்க வருவீங் கன்னும் தெரியும்... உங்களுக் காகத்த காத்திட்டிருக்கேன்! ஆமா... பாப்பா யாரு? புது போலீசா

"மிஸ்டர் ரத்தினபூபதி..."

"சொல்லுங்க தம்பி."

"ராயப்பனோட குடும்பக் கொலை விசயமா உங்க விசாரிக்க வந்திருக்கேன்."

"விசாரியுங்க."

"ராயப்பனுக்கும் உங்களுக்கும் ரொம்பக் காலமாவே ப இல்லையா?"

ரத்தினபூபதி முதல் தடவையாய்ச் சிரிக்க– பற்க இடைவெளியில் தங்கம் மினுமினுத்தது: "நீங்க ஒண்ண



புரிஞ்சுக்கலை, தம்பி. அந்த ராயப்பனுக்குத்தான் எம் மேலே பகையே தவிர, அவன் மேலே எனக்குப் பகையில்லை."

"அவனுக்கு உங்க மேலே என்ன பகை?"

"வெயில்ல வந்திருக்கீங்க... எளநீர் பறிச்சு தரச்சொல்லட்டுமா தம்பி?"

"அதெல்லாம் வேண்டாம்! ராயப்பனுக்கு உங்க மேலே என்ன பகை?"

"பெரிசா ஒன்னுமில்லை தம்பி... அவன் தன்னோட ஏழு சென்ட் பூமியை எங்கிட்டே அடமானம் வைச்சுப் பணம் வாங்கி இருந்தான். ஒரு வருடமா வட்டியும் தரலை... அசலை யும் தரலை... இன்னும் கொஞ்சம் பணத்தைக் கொடுத்து நிலத்தை எம்பேருக்கே எழுதி வாங்க முயற்சி செஞ்சேன். அது அவனுக்குப் பிடிக்கலை. குடும்பமே ஆளுக்கொரு அரிவாளைத் தூக்கிக்கிட்டு வெட்ட வந்துட்டாங்க... அப்போ பங்களாவில் நான் மட்டும் ஒண்டியாதான் இருந்தேன். பங்களாவுக்கு பின்பக்கமா ஓடிப்போய், தோட்டத்துல இருக்கிற ரெண்டு அல்சேஷனை அவுத்துவிட்டேன்... ஓடிட்டாங்க... அப்புறமா நான் போலீசில் புகார் கொடுத்தேன். அவங்க ராயப்பனையும்– அவனோட புள்ளைகளையும் கூண்டோடு கைது பண்ணி ஜெயிலில் தள்ளிட்டாங்க."

"அப்போ, ராயப்பனோட குடும்பத்துக்குத் தீ வைச்ச சம்பவம் பற்றி உங்களுக்கு எதுவுமே தெரியாது?"

"சுத்தமா" என்று கண்களை மூடித் திறந்தார், ரத்தினபூபதி.

"உங்கப் பண்ணையில மொத்தம் எத்தனைப் பேர் வேலை பார்க்கிறாங்கன்னு சொல்ல முடியுமா?"

"சொல்லலாமே... மொத்தம் இருபத்துமூணு பேர்."

"அவங்க பேரு, முகவரி எல்லாம் வேணும்."

"என் ஆளுங்க மேலே சந்தேகப்படுறீங்களா? படுங்க... படுங்க... போலீஸ் வேலைக்குப் போனாலே அப்படித்தான்– எதிரே யானை நின்னாலும் நம்பமாட்டார்கள். அதைத் தடவிப்

பார்த்தபின்னாடிதான் யாருன்னு ஒத்துக்குவாங்க. தரச்சொல்றேன். என்னோட பண்ணையில வேலை பார்க்கிற ஆட்களோட பேரு, ஊரு, அவங்களோட ஜாதகம் அத்தனையும் தரச்சொல்றேன்" என்று சொன்ன ரத்தினபூபதி, தன் இடக் கையை நீட்டி, உள்ளிடப்பேசியை எடுத்தார்.

"ரைட்டரா?"

"........."

"நம்ப பண்ணையில வேலை செய்கிற அத்தனைப் பேரோட அட்ரஸையும் பத்து நிமிடத்துல இங்கே கொண்டுவரணும்..."

"........."

"சீக்கிரம்! அரசாங்கத்துக்கு நம்ம ஒத்துழைப்பைத் தரவேண்டாமா?" கிண்டலாய்ச் சிரித்துவிட்டு, ரிசீவரை சாத்தினார், ரத்தினபூபதி. எதிரே உட்கார்ந்திருந்த ரேகாவை நிமிர்ந்து பார்த்துக் கேட்டார்:

"உனக்கு எந்த ஊர் பாப்பா?"

"சென்னை."

"ஆயிரந்தான் சொல்லு பாப்பா... இந்த போலீஸ் உத்தியோகத்துக்கு ஆம்பிளைங்கதான் லாயக்கு..."

ரேகா முகம் சிவந்தாள்.

"பாப்பாவுக்கு நான் சொன்னப் பேச்சுப் பிடிக்கலை போலிருக்கு... சரி, விட்டுரலாம்... அப்புறம் தம்பி, பைத்தியம் பிடிச்சு ஊரைவிட்டு ஓடிப்போன உங்கப்பா கிடைச்சாரா?"

"கிடைக்கலை."

"நான் சொன்னா நீங்க வருத்தப்படக்கூடாது தம்பி... உங்கப்பா உயிரோடு இருப்பாருன்னு எனக்குத் தோணலை. எந்த ஊர்ல... எங்கே விழுந்து செத்தாரோ?"

"நான் உங்கக்கிட்டே ராயப்பனைப் பத்திதான் விசாரிக்க வந்தேன். எங்க அப்பாவைப்பத்தி விசாரிக்க வரலை, மிஸ்டர் ரத்தினபூபதி."



"ராயப்பனோட குடும்பத்தை எரிச்சவங்களை அவ்வளவு சீக்கிரத்துல கண்டுபிடிக்க முடியும்னு நீங்க நினைக்கிறீங்களா தம்பி?"

"பத்து நாளில் கண்டுபிடிச்சு அவங்களை கைது பண்ணப் போறேன்."

"எனக்கென்னமோ நம்பிக்கை இல்லை தம்பி... சம்பவம் இராத்திரியோடு இராத்திரியா நடந்திருக்கு... யாருன்னு போய் அடையாளம் கண்டுபிடிக்க முடியும்?" அவர் சொல்லிக்கொண்டிருக்கும் போதே கையில் தாளோடு அந்த இளைஞன் வந்தான்.

"என்ன சந்திரன்? பண்ணையில வேலைப் பார்க்கிற அத்தனைப் பேரோட விவரங்களை எழுதிக் கொண்டாந் திருக்கியா?"

"கொண்டாந்திருக்கேன் சார்..."

"தம்பி கையில கொடுத்துடு."

அந்த இளைஞன், பட்டியலை நீட்ட- ரத்தினகுமார் வாங்கிக்கொண்டான்.

ரத்தினபூபதி கிண்டலாய்ச் சொன்னார்: "இந்தப் பட்டியலை வைச்சுக்கிட்டு நிதானமா கண்டுபிடிங்க, தம்பி. இப்போவாவது எனதீர் குடிக்கிறீங்களா?"

**ஜிப்மர்**

பிரெஞ்சு ஆட்சிக்காலத்தில் புதுச்சேரியில் உருவான மருத்துவக் கல்லூரி, இது. 1954-ம் ஆண்டு மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்கு வந்தபோது, இதை 'தன்வந்தரி மருத்துவக் கல்லூரி' என்று அழைத்தனர்.



அடுத்த பத்தாண்டில் அந்த மருத்துவ நிறுவனத்தை வளர்த்து, ஜவகர்லால் நேரு மருத்துவ மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (ஜிப்மர்) என்று 1964-ல் மத்திய அரசு மாற்றம் செய்தது.

"வேண்டாம்."

ரத்தினகுமாரும், ரேகாவும் எழுந்தார்கள். அறைக் கதவைத் திறந்துகொண்டு வெளியேவந்து வராந்தாவில் நடந்து- போர்டிகோவைத் தொட்டு- பைக்கில் பரவி- சுற்றுசுவரைக் கடந்தார்கள். ரேகா கேட்டான்:

"என்ன சார்... ஆள் ரொம்பவும் முரட்டுத்தனமா தெரியறார். பேசற பேச்சும் சரியில்லை... தப்பு இந்த ஆள்கிட்டதான் இருக்கு."

"இந்தப் பட்டியலில் இருக்கிற பண்ணையார்கள் பூராவையும் இன்னிக்கு விசாரிக்கப் போறோம், ரேகா. நாம கேக்கிற கேள்வியில எப்படியாவது எவனாவது ஒருத்தன் உண்மையைக் கக்குவான். ஒருத்தன் சிக்கினா போதும்... எல்லாரையும் வளைச்சுடலாம்."

'பைக்' மறுபடியும் புழுதித் தெருக்களில் ஓடி- கடப்பி சாலையைத் தொட்டது. கொஞ்சம் தொலைவில் சோலையார் அணை தெரிய- ரேகா சொன்னான்:

"அணைக்குப் போய் ஒரு அஞ்சு நிமிடம் இருந்துட்டுப் போலாமா சார்!"

"இந்நேரம் அணையில யாரும் இருக்கமாட்டாங்க... வெயில் நெருப்பாட்டம் கொளுத்தும் பரவாயில்லையா, ரேகா!"

"அஞ்சு நிமிடம்தானே? பார்த்துட்டு போயிடலாம்."

'பைக்' அணையை நோக்கித் திரும்பியது. நெருங்கி ஒரு சின்ன மரத்துக்குக் கீழ் கொட்டிக்கிடந்த நிழலில் 'பைக்'கை நிறுத்திவிட்டு, உதிர்ந்தார்கள்.

ரேகா, சுற்றும் முற்றும் பார்த்தான்.

"சுத்தமாய் ஜனநடமாட்டம் இல்லையே..."

"சாயந்தர நேரம்தான் ஆட்கள் வருவாங்க. வாங்க, ரேகா. அணையோட கோபுரம் வரைக்கும் போயிட்டு வரலாம்."

நடந்தார்கள்.



"இன்னும் ஒரு வாரம், பத்து நாட்களில் ராயப்பன் வழக்கை முடிச்சுடலாமா சார்?"

"தாராளமா."

"எனக்கென்னவோ நம்பிக்கை வரமாட்டேங்குது சார். ரெண்டு கண்ணையும் கட்டி, காட்டுலவிட்ட மாதிரி இருக்கு. ஒரு சின்னத் தடயம்கூட நமக்குக் கிடைக்கலை. இந்த ஊர் சப்-இன்ஸ்பெக்டர் முதலில் விசாரிச்சிருப்பார். அவரைப் போய்ப் பார்க்கலாமா சார்?"

"இங்கிருந்து நேரா போலீஸ் நிலையத்துக்குத்தான் போகப்போகிறோம்; ரேகா" பேசிக்கொண்டே வந்ததில்- அணையின் மையத்திற்கு வந்திருந்தார்கள். கீழே திறந்திருந்த மதகின் வழியாகத் தண்ணீர் பாலாய் நுரைத்துக்கொண்டு ஓடியது.

"இந்த அணையில் வருடம் பூராவும் தண்ணி இருக்குமா சார்?"

"பெரும்பாலும் இருக்கும்."

"சின்ன அணையானாலும் அழகா இருக்கு" சொன்ன ரேகா, பார்வையை நாலா பக்கமும் ஓட்டினான். நீலநிறத்தில் குளிப்பாட்டின மாதிரி தொலைதூரத்தில் மலைச்சிகரங்கள் பளிச்சென தெரிந்தன. வெள்ளைக் கோடுகள் கிழித்த மாதிரி ஆற்றின் ஓரத்தில் கொக்குகள் ஏராளமாய், வரிசையாய் நின்றிருந்தன. கண்ணுக்கெட்டின தூரம் வரைக்கும் நீர்ப்பரப்பு அசைந்தது. எங்கும் கனமான நிசப்தம்.

அரை நிமிட நேர மவுனத்திற்குப் பிறகு ஏதோ சொல்வதற்காக வாயைத் திறந்த ரத்தினகுமாரின் தலைக்கு மேலே-

"உஷ்ஷ்ஷ்ஷக்க்க்..." என்று ஒரு தோட்டா சீறியது. சீறி- எதிரே இருந்த அணைக்கட்டின் சுவரில் பட்டு, அரைக்கட்டி செங்கலையும்- சிமெண்டு பூச்சையும் உதிர்த்து, உருண்டது.

ரத்தினகுமார் சட்டென்று கீழே படுத்தபடி கத்தினான். "ரேகா, யாரோ நம்ம ரெண்டு பேரையும் குறி வைச்சு

"சுடுறாங்க. நீங்களும் கீழே படுங்க."

குபீரென்று முகம் மாறிப்போன ரேகாவும் கீழே உருண்டாள். வெயிலில் காய்ந்திருந்த தரைப்பரப்பு, உடம்பைச் சுரீரென்று தொட்டது... சுட்டது.

நீண்ட நேரம் அப்படியே படுத்திருந்தார்கள்.

கனமான அமைதி.

ரத்தினகுமார் மெல்லத் தலையை உயர்த்திப் பார்த்தான். கண்ணுக்கெட்டின தூரம் வரைக்கும் ஆள் அரவமே இல்லை.

'யார் சுடுகிறார்கள்?'

'எங்கிருந்து சுடுகிறார்கள்?'

"ரேகா..."

"சார்..."

"எம் பின்னாடியே ஒண்டின மாதிரி வாங்க... என்னை விட்டு விலகிப் போகாதீங்க. யாரோ மறைஞ்சு நின்னு, நம்மைக் குறி பார்க்காங்க."

"யாரா இருக்கும் சார்!"

"ரத்தினபூபதியோட கைங்கரியமாத்தான் இருக்கும்" பேசிக்கொண்டே பைக்கை நோக்கி மெல்ல ஊர்ந்தார்கள்; நிதானித்தார்கள். மீண்டும் மெல்ல ஊர்ந்தார்கள்.

கொஞ்சம் கொஞ்சமாய் பைக்கை நெருங்கி– ஒரு இருபதடி தொலைவில் அப்படியே படுத்தார்கள்.

"ரேகா..."

"சொல்லுங்க சார்."

"நான் இப்போ பைக்கை நோக்கி ஓடுவேன்... நீங்களும் எம் பின்னாடியே– சேர்ந்த மாதிரி ஓடிவரணும்... துப்பாக்கி சுடுற சத்தம் கேட்டா... கீழே படுத்துடணும்..."

"சரி சார்..."

அவன் தலையசைத்த விநாடி....



ரத்தினகுமார் எழுந்து, பைக்கை நோக்கி "தப...தப..." என்று ஓடினான்.

மூச்சை இரைத்துக்கொண்டு, முகம் சிவக்க ஓடி– பைக்கின் மேல் பாய்ந்து கிக்கரை உதைத்தான்.

அது எஜமானரின் அவசரத்தை உணர்ந்துகொண்ட மாதிரி– 'திதட் திதட்' என்று. புகைவிட்டு 'ஸ்டார்ட்' ஆகிக்கொள்ள– கத்தினான்:

"ரேகா.... சீக்கிரமா ஏறுங்க..."

ரேகா பாய்ந்து, பில்லியனில் பரவினாள்.

அதே விநாடி–

'விஷ்ஷ்ஷ்க்... –ஒரு ஈயத்தோட்டா, பைக்கின் இடப்புறமாய் இரண்டடி தள்ளி விழுந்து, மண்தரையில் ஒரு குழியை ஆழமாய்ப் பறித்தது.

ரத்தினகுமார் பைக்கைப் பறத்தினான். வேகமீட்டர் எண்பதில் தன் சிகப்பு நாக்கைச் சுழற்றியது.

## 7

இரவு மணி பத்து.

நாற்காலிகளில் எதிரெதிரே ரத்தினகுமாரும், ரேகாவும் உட்கார்ந்திருக்க, அவர்களுக்கு கொஞ்சம் தள்ளி நின்றிருந்த முத்துக்குமார், கோபத்தில் பொரிந்துகொண்டிருந்தான்.

"நான் காலையில புறப்பட்டுப் போகும்போதே சொன்னேன்... ரத்தினம், நீதான் கேட்கலை... அந்த ரத்தினபூபதி ரொம்பவும் மோசமான பேர்வழி... உங்க ரெண்டு பேரையும் முன்னாடி போகவிட்டு, அவன் தன்னோட ஆளைத் துப்பாக்கியோடு பின்னாடியே அனுப்பி இருக்கான்... நீங்க ரெண்டு பேரும் தப்பிச்சு வந்தது பூர்வஜென்ம புண்ணியம்தான்."

"சரி, பேச்சை விடுங்கண்ணே! காலையிலிருந்து இதையே திருப்பித் திருப்பிச் சொல்லிட்டு இருக்கீங்க... போலீஸ் உத்தியோகத்துக்குன்னு வந்தபின்னாடி அந்த மாதிரியான பூச்சாண்டித்தனமான வேலைக்கெல்லாம் பயப்பட முடியுமாண்ணே?"

"சரி... சரி... நீ ரெண்டு நாளைக்கு அந்தப் பெண்ணைக் கூட்டிட்டு வெளியே எங்கேயும் போயிடாதே... வீட்டிலே இரு. போலீசில் புகார் கொடுத்திட்டேடல்ல... ஆளை அவங்க கண்டுபிடிக்கட்டும்..."

"வீட்டுல உட்கார்ந்திருக்கவா நாங்க ரெண்டு பேரும் சென்னையிலிருந்து வந்தோம்? அண்ணே! ராயப்பனோட வீட்டைக் கொளுத்தினவங்க, நாங்க ரெண்டு பேரும் எந்தக் காரணத்துக்காக வந்திருக்கோம்ங்கிறதைப் புரிஞ்சுகிட்டாங்க... எங்களையும் தீர்த்துக்கட்டுறதுக்காக துப்பாக்கியை எடுத்திருக்காங்க... அவங்க எங்களை நோக்கி சுடுறதுக்கு முன்னாடி நாங்க அவங்களைப் பிடிச்சுடுவோம்."

"எதுக்கும் கொஞ்சம் ஜாக்கிரதையா இரு. ரத்தினம். ஊர் இருக்கிற நிலவரம் சரியில்லை... எதிரி எங்கே மறைஞ்சி இருக்கான்னே தெரியலை."

"சரிண்ணே... தூக்கம் கண்ணைச் சுழட்டுது... போய்த் தூங்குவோம். மத்த விசயங்களை நாளைக்குக் காலையில பேசிக்குவோம்... ரேகா தங்கறதுக்கு அறை ஏற்பாடு பண்ணிட்டீங்களா?"

"கோடியில் இருக்கிற அறையை ஒதுக்கிக் கொடுத்திருக்கேன். தோட்டத்துப் பக்க ஜன்னல் வழியா காத்தும் நல்லா வரும்... ரேகாவும், நந்தாவும் ஒரே அறையில் தங்கட்டும்."

"நந்தாவை எங்கே காணோம்?"

முத்துக்குமார் சொன்னான்: "அறையில்தான் இருக்கா... ரொம்பவும் பயந்த சுபாவம் போலிருக்கு. நேத்து இராத்திரி நடந்த அதிர்ச்சியிலிருந்து அவ இன்னமும் மீளலை. எந்த



ஆம்பிளையைப் பார்த்தாலும், மிரட்சியா பார்க்கிறா. நான்தான் அந்த அறையில் போய் இருக்கச் சொன்னேன்."

"ரெண்டு நாளில் எல்லாம் சரியாயிடும்."

"நந்தாவுக்கு இங்கே வேலை செய்யப் பிடிச்சிருக்கா?" ரேகா கேட்டாள்.

"நான் கேட்டதுக்குப் பிடிச்சிருக்குன்னுதான் சொன்னாள்."

"நந்தாவைக் கெடுக்க நினைச்சவங்களும், என்னையும், ரேகாவையும் கூட நினைச்சவங்களும் ஒரே ஆட்களாகத்தான் இருக்கணும், அண்ணே! அதுவும அவங்க அநேகமா ரத்தினபூபதியோட ஆட்களாத்தான் இருக்கணும்... நந்தா சொன்ன ஆசாமிகளில் ஒருத்தன், மீசைக்காரன். ரத்தினபூபதி கொடுத்திருக்கிற பண்ணையாட்கள் பட்டியலில் அவன் இருந்தான்னா ஸ்டேஷனுக்குத் தள்ளிட்டுப் போயிட வேண்டியதுதான்."

"அப்போ நீ சொல்றதைப் பார்த்தா... ராயப்பனோட குடும்பத்தைக் கொளுத்தின ஆசாமிகள்தான் நந்தாகிட்டே தப்பா நடந்துக்கப் பார்த்திருக்காங்க... அவங்கதான் உன்னையும், ரேகாவையும் கூட முயற்சி பண்ணி இருக்காங்க."

"ஆமா!"

"சரி, போய்ப் படுங்க... நாளைக்குக் காலையில மத்ததைப் பேசிக்கலாம்" முத்துக்குமார் சொல்ல- ரேகா, ரத்தினகுமாருக்கு ஒரு 'குட் நைட்'டை உதிர்த்துவிட்டு- தனக்காக ஒதுக்கப்பட்டு இருந்த அறையை நோக்கி நடந்தாள்.

அவள், அறைக்குள் நுழைந்ததும்- கட்டிலில் உட்கார்ந்து ஒரு வார இதழைப் புரட்டிக்கொண்டிருந்த நந்தா தயக்கமாய் எழுந்து நின்றாள்.

"என்ன நந்தா... உனக்குத் தூக்கம் வந்தா தூங்கி இருக்கலாமே?"

நந்தா புன்னகைத்தாள்: "எனக்குத் தூக்கம் வரலை!"

"இந்த வீட்டுல வேலை செய்ய உனக்குப் பிடிச்சிருக்கா?"

"இந்த வீட்டுக்கு நான் வந்தது, என் அதிருஷ்டம்ன்னு நினைக்கிறேன். இங்கே-எல்லாருமே நல்ல ஆட்களா தெரியுறாங்க."

"அப்போ... நீ இந்த வீட்டுல இருந்துடப் போறே?"

"அவங்க விரும்பினா..."

"அவங்க விரும்புற மாதிரி நீ நடந்துக்கணும்... நாளைக்கு குளிச்சுட்டு, மாத்திக் கட்டிக்க உனக்கு சேலை இருக்கா?"

"ம்... சாயந்தரம் போய் ரெண்டு சேலை எடுத்துட்டு வந்து கொடுத்தாரு."

"யாரு?"

"அவர்தான்."

"அவருன்னா யாரு? ஓ... முத்துக்குமாரா?"

தலையாட்டியநந்தாவின்முகத்தில் வெட்கத்தின் மினுமினுப்பு.

"ஒரே நாளில் இவ்வளவு முன்னேற்றமா? நல்லது! படுக்கலாமா நந்தா? நாளைக்குக் காலையில் மீதியைப் பேசிக்குவோம்." ரேகா சுவரோர கட்டிலில் சாய்ந்தாள். நந்தாவும் விளக்கை அணைத்துவிட்டு, அருகே இருந்த கட்டிலில் படுத்தாள். வீட்டுக்கு வெளியேயும் உள்ளேயும், கனமாய்ப் பரவிக்கிடந்த நிசப்தத்தைக் கலைத்துக்கொண்டு, சுவர்க்கோழி சத்தம் மட்டும் கேட்டுக்கொண்டிருக்க- அந்த இரவு மெல்ல மெல்லக் கரைந்து நடுநிசிக்கு வந்தபோது- ஏதோ ஒரு வினாடியில் ரேகா சட்டென்று விழித்துக்கொண்டாள்.

ஏதோ சத்தம்...

தோட்டத்து ஜன்னல் பக்கத்தில் யாரோ நடக்கும் சத்தம்.

போர்வையை உதறிக்கொண்டு, குபீரென்று எழுந்து உட்கார்ந்தாள், ரேகா. பக்கத்து கட்டிலில் நந்தா லேசாக வாய் பிளப்போடு ஆழ்ந்த தூக்கத்தில் சிக்கி இருந்தாள்.

அது என்ன சத்தம்?'



ரேகா ஜன்னலருகே வந்து, கம்பிகளின் வழியே தோட்டத்து இருட்டை எட்டிப்பார்த்தாள். இருட்டில் யாரோ 'மசமச'வென்று நின்றிருந்தார்கள்.

"யாரது?" எனக் குரல் கொடுத்துக்கொண்டே- தன் தலையணைக்குக் கீழே மறைத்து வைத்திருந்த துப்பாக்கியை எடுத்துக்கொண்டு- மறுபடியும் ஜன்னல் அருகே வந்தாள்.

தோட்டத்தில் அந்த உருவத்தைக் காணவில்லை. செடி மட்டும் அசைந்துகொண்டிருந்தது.

"என்னங்க..." குரல் கொடுத்தாள், ரேகா.

அந்தச் சத்தம் கேட்டு நந்தா எழுந்து வந்தாள். அவள் முகத்தில் பயம்; குழப்பம்.

"நந்தா... நீ இந்த அறையில் இரு... ஒரே நிமிடத்துல வந்துடுறேன். கதவைத் திறந்துகொண்டு, துப்பாக்கியுடன் பக்கத்து அறைக்குள் நுழைந்தாள். அங்கே சுவரோரமாய்க் கயிற்றுக்கட்டிலில் படுத்திருந்த முத்துக்குமார் அருகே வந்தாள்.

"சார்..."

"........"

"சார்..."

இரண்டாவது குரலுக்கு முத்துக்குமார் எழுந்தான். கண்களைக் கசக்கிக்கொண்டே "என்ன ரேகா... எங்கே புறப்பட்டுட்டே?" என்று கேட்டான்.

"சார்... தோட்டத்துப் பக்கம் யாரோ நடமாடுறாங்க... என்னோட அறை ஜன்னலுக்குப் பக்கத்துல வந்து நின்னுட்டிருந்தாங்க..."

ரேகா சொன்னதும் முத்துக்குமார் வேகமானான். எதிரே இருந்த ரத்தினகுமாரின் அறைக்குப் போய்க் கதவைத் தட்டினான். குரலில் பதற்றம் ததும்பியது.

"ரத்தினம்... ரத்தினம்..."

அரை நிமிட அவகாசத்தில் அறை- வெளிச்சத்துக்கு

வந்து– கதவு திறக்கப்பட்டது. நீலவரியிட்ட பைஜாமாவிலும், கண்களில் பாக்கியிருந்த தூக்கத்தோடும் ரத்தினகுமார் நின்றிருந்தான்.

கையில் துப்பாக்கியுடன் ரேகாவையும், அருகில் முத்துக்குமாரையும் பார்த்ததுமே முகம் மாறினான்.

"என்னண்ணே?"

"தோட்டத்துல யாரோ நடமாடிட்டிருந்ததா ரேகா சொல்லுது..."

பதற்றமானான் ரத்தினகுமார். "யார் ரேகா?" முகம் மாறிக் கேட்டான்.

"தெரியலை சார்..."

"ஒரு நிமிடம் இருங்க" உள்ளே போய் துப்பாக்கி, டார்ச்சோடு வந்தான், ரத்தினகுமார்; "ரேகா நீங்களும் அண்ணனும் வீட்டில் இருங்க... நான் மட்டும் தோட்டத்துப் பக்கம் போய்ப் பார்த்துட்டு வர்றேன்."

"நானும் வர்றேன் சார்."

"இந்த இருட்டுல நீங்க வேண்டாம், ரேகா. உங்களாலே வேகமா ஓட முடியாது."

"இல்லை சார்... நான் வர்றேன். ஒரு சாதாரண பெண்ணா இருந்தா நீங்க சொல்றதைக் கேட்டுட்டு இங்கே இருந்துடலாம். ஆனா, நான் போலீஸ் பெண். உங்களுக்கு உதவி செய்யத்தான் வந்திருக்கேன்."

"சரி... வாங்க... என் பின்னாடியே ஓடி வாங்க... இருட்டுல தனியாப் போயிடாதீங்க!" சொல்லிக்கொண்டே தோட்டத்தை நோக்கி ஓடினான், ரத்தினகுமார்.

ரேகா அதே வேகத்தோடு அவனைப் பின்தொடர்ந்தாள்.

வாசல் கதவைத் திறந்துகொண்டு வெளியே பாய்ந்தார்கள். இருவர் கைகளிலும் இருந்த அந்த துப்பாக்கி குரோமிய உடம்பு அந்த இருட்டிலும் பளபளத்தன.



'டார்ச்' ஒளிர்ந்தது.

"ரேகா..."

"சார்..."

"காலையில நம்ம ரெண்டு பேரையும் கூட முயற்சி பண்ணின அந்த ஆள்தான் வந்துருக்கணும். தோட்டத்துல எங்கேயாவது அவன் மறைந்திருக்க வாய்ப்புண்டு. ஜாக்கிரதையா இருங்க."

"சரி சார்."

ஓடிவந்தவர்கள் தோட்டத்துக்கு வந்ததும், சட்டென்று நின்றார்கள்.

ஒருஏக்கர் பரப்பில் விஸ்தாரமாய்த் தெரிந்த அந்த தோட்டம் முழுவதும் கனமான இருட்டு. 'டார்ச்' வெளிச்சத்தை வீசிக்கொண்டு, தொடர்ந்து மெதுவாய் நடந்தார்கள்.

"சரக்... சர்ர்ரக்..."

ரேகா படுத்திருந்த அறையின் ஜன்னல் அருகே வந்தார்கள். கீழே டார்ச்சை அடித்துப் பார்த்தான், ரத்தினகுமார்.

தோட்டத்து மணலில் சில தாறுமாறான காலடிப் பதிவுகள்– அழிக்கப்படாத ஒரு பிடித்துண்டு.

"ரேகா..."

"சார்..."

"காலடிப் பதிவுகளைப் பார்த்தீர்களா? வந்தவன் செருப்பையோ, பூட்சையோ உபயோகிக்காம வந்திருக்கான்"

ரத்தினகுமார் சொல்லிக்கொண்டிருக்கும்போதே– தோட்டத்தின் கோடியில் ஒரு செடியை சலசலவென்று அசைத்துக்கொண்டு, அதற்குப் பின்னால் உட்கார்ந்திருந்த யாரோ ஒருவன் எழுந்து வேகமாய் ஓட ஆரம்பித்தான்.

ரத்தினகுமார் பரபரத்தான்.

"ரேகா... என்னோடு ஓடிவாங்க. அவன் இங்கேதான் இருக்கான்" கத்திக்கொண்டே கையிலிருந்த 'டார்ச்' வெளிச்சம் தத்திக்குதிக்க, ஒரு கையில் துப்பாக்கியை

உயர்த்திக்கொண்டு- செடிகளை விலக்கியபடி தபதபவென்று ஓடினான், ரத்தினகுமார்.

ரேகாவும் அவன் பின்னாடி பாய்ந்தாள்.

"த்தட்... த்தட்... த்தட்..."

உடம்பு வியர்த்து ஊற்ற- மூச்சிரைத்தது, ரேகாவுக்கு. கட்டியிருந்த சேலையின் தலைப்பு கால்களைத் தடுக்கித் தடுக்கி விட்டது.

ஓடிக்கொண்டிருந்த ஆள் ஒரு தடவை கீழே உருண்டு எழுந்து- மறுபடியும் ஓட ஆரம்பித்து- தோட்டத்து எல்லையை நெருங்கிக்கொண்டிருந்தான்.

"ரேகா... சீக்கிரம்! அவன் வேலி தாண்டிக் குதிச்சா தப்பிச்சுடுவான். அதுக்காக அவசரப்பட்டு, துப்பாக்கியைப் பயன்படுத்திடாதே... அந்த ஆசாமி உயிரோடு வேணும்... அவனைப் பிடிச்சாத்தான் ராயப்பனோட குடும்பத்தைக் கொளுத்தின ஆள் யாருன்னு தெரியும்."

"துப்பாக்கி... [illegible] ...ன்படுத்துங்க சார்..." பெருமூ... [illegible]

செடிகளுக்கு மத்தியில் ஏதோ ஒரு நிழல் மாதிரி ஓடி- வேலி... தாவிக் குதித்து- கண் இமைக்கிற நேரத்தில் மறுபக்கம் போய்விட்டான்.

ரத்தினகுமார் துப்பாக்கியை இடுப்பிலும்- 'டார்ச்'சை வாயிலும் கவ்விக்கொண்டு- சிறிய 'கேட்'டில் தொற்றி ஏற- ரேகாவும் சிரமமாய் ஏறினாள்.

"உங்களாலே முடியலைன்னா, நீங்க இங்கே இருங்க ரேகா. நான் ஆளை அமுக்கிட்டு வந்துடறேன்."

"இல்ல சார்... நானும் வர்றேன்."

"உங்களாலே ஏறமுடியுமா?"

"முடியும் சார்."

சிரமமாய் அவள் ஏறிய அதே விநாடி...



ரத்தினகுமாரின் வாயிலிருந்த டார்ச் நழுவி- தோட்டத்தின் இந்தப் பக்கத்திலே ஒரு கல்லின்மேல் விழுந்து 'சலவீர்' என்று உடைந்து, கண்களை மூடிக்கொண்டது.

"சார்... டார்ச்..."

"அதை பொறுக்கிட்டிருக்க நேரமில்லை, ரேகா. அந்த ஆள் தப்பிச்சிடுவான். நான் குதிக்கிற இடத்திலே நீங்களும் குதியுங்க. இடம் மாறி குதிக்காதீங்க... காலிலே அடிபட்டுடும்..."

"தொம்..."

"தொம்..."

குதித்தார்கள்.

சுற்றிலும் இருட்டு! நிசப்தம்!!

ஆகாயம் நட்சத்திரங்களைக் காட்டிக்கொண்டிருக்க- இருட்டில் தொலை தூரத்தில் நின்றிருந்த பனை மரங்கள் காற்றில் வேகமாய் ஆடிக்கொண்டிருந்தன.

குதித்த இடத்திலே நின்றார்கள் இருவரும். ரத்தினகுமார், வியர்வை வழியும் முகத்தோடு சுற்றும் முற்றும் பார்த்தான்.

"அவன் எந்தப் பக்கமா ஓடினானோ தெரியலையே... நல்ல நேரத்துல டார்ச்சும் காலை வாரிடுச்சு... பேசாம திரும்பிடலாமா ரேகா?"

"கொஞ்ச தூரம் போய்ப் பார்ப்போம் சார்."

"எந்தப் பக்கம் போறது?"

"முன்னாடி போலாம்."

நடந்தார்கள். கைகளில் இருந்த துப்பாக்கிகளை உயர்த்திப் பிடித்துக்கொண்டு- காதுகளை உன்னிப்பாக்கி, சுற்றும் முற்றும் பார்த்தபடி நடந்தார்கள்.

"சர்ரக்... சர்ர்ரக்..."

"இருட்டுல ஒண்ணும் தெரியலை, ரேகா. நாம இப்படிப் போறது புத்திசாலித்தனமில்லை... தப்பி ஓடின ஆசாமி எந்த

நிமிடமும் நம்மைத் தாக்கலாம்..."

ரத்தினகுமார் சொல்லி வாயை மூடவில்லை.

'ஷ்ஷ்ஷ்ஷ் க்க்க்க்' என்ற சீறலோடு- தோட்டா ஒன்று ரத்தினகுமாருக்கும், ரேகாவுக்கும் இடையில் காற்றை கிழித்துக் கொண்டு பாய்ந்தது.

"ரேகா... கீழே குனி..."

குனிந்தாள்.

ரத்தினகுமார் தோட்டா வந்த திசை நோக்கி- தன் துப்பாக்கி வாயைத் திருப்பினான், டிரிக்கரைச் சுண்டினான்.

"டுமீல்..."

அது, இருட்டில் போய் எங்கோ வெடித்தது.

பிறகு-

நிசப்தம்.

இருவரும் மூச்சை அடக்கிக்கொண்டு- கீழேயே குனிந்திருந்தார்கள். நிமிடங்கள் கரைந்துகொண்டிருந்தன. ஐந்து நிமிடங்களுக்குப் பின்-

ரத்தினகுமார் நிமிர்ந்தான்.

"ரேகா... இந்த இருட்டுல நாம இருக்கிறது சரியில்லை, வீட்டுக்குக் கிளம்புவோம்... எம்பின்னாடியே ஓடிவாங்க."

ரத்தினகுமார் ஓட-

அவனைப் பின்தொடர்ந்து போனாள், ரேகா.

பத்தடி ஓடி இருப்பார்கள்.

'ஷ்...ஷ்...ஷக்க்க்...'

"ம்...ம்மா...ஆ..." காற்றையே அறுக்கிற அலறலோடு ரேகா துள்ளி விழுந்து, கீழே உருண்டாள்.

"ரேகா..."

முன்னால் ஓடிக்கொண்டிருந்த ரத்தினகுமார் தட்டென்று நின்று திரும்பிப் பார்த்து, ரேகாவிடம் ஓடிவந்தான். கீழே



"உனக்கு ஒரு வேலை வாங்கித் தருகிறேன்... பிச்சை எடுப்பதை விட்டுவிடு...!"

"இதிலே எனக்கு மாசம் ஆறாயிரம் கிடைக்குது, சாமி! வேலையில் இதைவிட அதிகச் சம்பளம் கிடைக்குமா?"

-வீ. பத்மா, மதுரை.





"நீ என் மனைவியா இருப்பது என் கையைப் பலப்படுத்துகிறது!"

-வி.பா. ராணி, சென்னை.



"என் மகன் விட்ட ராக்கெட்டு பக்கத்து வீட்டை எரித்துவிட்டது!"

"கவலைப்படாதீங்க! வழக்கை புஷ்வாணம் ஆக்கிவிடுவோம்!"

-ராஜாத்தி, தூத்துக்குடி.

# இதயம் பேசுகிறது!

நாவலைப் படித்துவிட்டு, உங்கள் கருத்துகளை எழுதி அனுப்புங்கள். முகவரி: இதயம் பேசுகிறது, "ராணி முத்து", சென்னை-600 007.

## உறங்காத பூக்கள்!

நாவலரசி வி. உஷாவின் "உறங்காத பூக்கள்" உதிராத பூக்களாய் மணம் வீசி, எங்கள் நெஞ்சில் என்றென்றும் நிலைத்திருக்கும்! இராம. அரங்கண்ணலின் "அவள் கொடுத்த விலை" பாமரனின் "தீர்ப்பு" இரண்டு சிறுகதைகளும் பசுமரத்து ஆணிபோல் மனதில் பதிந்து விட்டன!

*கொ.சி. சேகர், பெங்களூர்.*

"காதலர்கள் கோழைகளாக இருந்துவிட்டால், காதல் என்றுமே வாழ்வதில்லை" என்ற கருத்தை நிரூபித்தது.

*தி. ஸ்ரீசற்குரு, முத்தம்மன்நகர்.*

மிகவும் எதார்த்தமாகவும், நேர்த்தியாகவும் இருந்தது. இருபத்தாறு அத்தியாயங்களுமே விறுவிறு + சுறுசுறு!

*சு.மு. சுரேஷ், அரைக்கால்கரை.*

வரிக்கு வரி சுவையாக இருந்தது. பாராட்டுகள்!

*கே. விசுவநாத், பெங்களூர்.*

"உறங்காத பூக்கள்" எங்கள் இதயங்களைக் கவர்ந்து இழுத்து விட்டது.

*கவிதிலா, பத்தலூர்.*

படிக்க சுவாரசியமாக இருந்தது. துணுக்குகளும் அருமை.

*மு. கணேசமூர்த்தி, சென்னை.*

மிக சிறப்பாக, உயிரோட்டத்துடன் கவிதை நடையில் கொண்டுசென்று, இறுதியில் யாரும் எதிர்பார்க்காத திருப்பம்!

*விக்கிரமாதித்தன், ஜோடர்பாளையம்.*

முடிவு எதிர்பாராத திருப்புமுனை. மதிமலர், ஆதி இருவருமே தியாகச் சின்னங்கள்!

*கோவி. மதிவாணன், புத்திராம்பட்டு.*

ஆதி - மதிமலர் இணையாமல் போய்விட்டாலும், தங்களது கொள்கையாலும்... குணத்தாலும் உயர்ந்து நிற்கிற உள்ளதப் பாத்திரங்கள்!

*ப. காளிதாசன், நீர்விளங்குளம்.*

அட்டையில் இப்படி கொட்டக் கொட்ட விழிக்கும் அழகியைக் கண்டால் எந்தப் பூக்கள்தான் உறங்கும்?

*இரா.அ. ராமன், மணவிளை.*



விழுந்து கிடந்த அவளைத் தூக்கினான்.

சரியாய் மார்பில் தோட்டாவை வாங்கி, இரத்தத்தில் சகசகத்துப்போயிருந்த ரேகா, ரொம்பவும் சுலபமாய் செத்துப்போயிருந்தாள்.

ரத்தினகுமார் வெறிபிடித்தவனைப் போல் திமிர்ந்தான். துப்பாக்கியை உயர்த்தி, நாலா பக்கமும் ஆவேசமாய்ச் சுட ஆரம்பித்தான்.

துப்பாக்கி வெடித்த சத்தம் கேட்டு, அக்கம் பக்கத்து வீடுகளில் தூங்கிக்கொண்டிருந்தவர்கள் விழித்து, ஒவ்வொருவராய் ரத்தினகுமாரை நோக்கி வர ஆரம்பித்திருந்தார்கள்.

## 8

சோலையார்புரம் சப்-இன்ஸ்பெக்டர் கீர்த்திவாசன், ஜீப்பில் ஸ்தலத்துக்கு வந்து சேர்ந்தபோது நேரம் 2.30 மணி. அந்த நடுநிசியிலும் கிராமம் விழித்து, ஜனங்கள் தெரிந்தார்கள். ரத்தினகுமார் இன்னும் அதிர்ச்சியில் இருந்தான். நந்தா அழுதுகொண்டிருக்க, முத்துக்குமார் மோவாயில் கை வைத்து கவலையாய் உட்கார்ந்திருந்தான்.

பெட்ரோமேக்ஸ் விளக்கு ஒன்று புஸ்சென்று சிறி வெளிச்சத்தைக் கொடுத்துக்கொண்டிருந்தது. அதன் வெளிச்சத்தில், ஒரு விரிப்பின்மேல் மல்லாந்து தெரிந்த ரேகா- நிசப்தமாகி வாய் பிளந்திருந்தாள். மேல்பல்வரிசை வெள்ளைக்கோடாய் தெரிய- கண்களைப் பாதி சொருகி, உயிரை விட்டிருந்தாள். மார்புச் சேலை பூராவும் கட்டி கட்டியாய் உறைந்துபோன இரத்தம்.

ஜீப்பிலிருந்து இறங்கிய கீர்த்திவாசன் தன் தலையிலிருந்த தொப்பியை எடுத்துக் கக்கத்திற்குக் கொடுத்துக்கொண்டே ரத்தினகுமாரை நெருங்கினார். திடீரென்று தூக்கத்தை

கொடுத்துக்கொண்டு வந்ததில் கண்களில் லேசாய் சிவப்பை வாங்கி இருந்தார். ரத்தினகுமாரின் தோள்மேல் கை போட்டு தனியாகக் கூட்டிப்போய் கேட்டார்.

"எப்படி மிஸ்டர் ரத்தினகுமார்?"

"ரத்தினகுமார் இரண்டு நிமிடத்திற்குள், நடந்ததைச் சொன்னான். அவன் சொல்லச் சொல்ல கீர்த்திவாசனின் முகத்திலிருந்த கொஞ்ச நஞ்ச தூக்கக் கலக்கமும் காணாமல் போயிற்று.

"நேத்தைக்கு காலையில சோலையார் அணையில் உங்க ரெண்டு பேரையும் யாரோ கட முயற்சி பண்ணினதா சொன்னீங்க. அந்த நிமிடத்திலிருந்தே நீங்க ஜாக்கிரதையா இருந்திருக்கணும் மிஸ்டர் ரத்தினகுமார். நீங்களும் ரேகாவும் 'கிரைம் பிராஞ்ச்'சை சேர்ந்தவங்கன்னு அடையாளம் கண்டுகிட்டு, உங்களை' முடிக்கப் பார்த்திருக்காங்க... யாரோ ஒரு ஆசாமியை பின்தொடர்ந்து இந்த இராத்திரி நேரத்துல நீங்களும் ரேகாவும் வெளியே வந்திருக்கக்கூடாது."

"ரேகாவோட அறைவரை வந்திருக்கிற ஒரு ஆசாமியை பின்தொடராம இருக்க முடியுமா?"

"தோட்டத்துல அறை ஜன்னலுக்குப் பக்கத்துல பாதச்சுவடு கிடைச்சதா சொன்னீங்களே... அதைப் பார்த்துட்டு வரலாமா?"

"வாங்க... போகலாம்..."

காவலர்களும், போலீஸ் போட்டோகிராபரும் ரேகாவை மொய்த்துக்கொள்ள– கீர்த்திவாசனும், ரத்தினகுமாரும் தோட்டத்தை நோக்கிப் போனார்கள்.

"சென்னைக்குத் தகவல் அனுப்பிட்டீங்களா, ரத்தினகுமார்?"

"இல்லை... காலையில்தான் அனுப்பணும்... கமிஷனருக்கு இது அதிர்ச்சியாக இருக்கும். ராயப்பனோட கொலை விவகாரத்தைக் கவனிக்க வந்த முதல்நாளே இந்தச் சம்பவம்



நடந்திருக்கு..."

"நீங்க யார் மேலே சந்தேகப்படுறீங்க ரத்தினகுமார்?"

"அந்த ரத்தினபூபதி மேல்தான்! அவன் சரியில்லை... ராயப்பனோட விவகாரத்துல நானும் ரேகாவும் அவனை எங்கே மோப்பம் பிடிச்சுடுவோமோன்னு பயந்துபோய்– தன்னோட ஆட்களை அவன் ஏவிவிட்டிருக்கான்."

"மிஸ்டர் ரத்தினகுமார்... அந்த ரத்தினபூபதி ஒரு சாதாரண குப்பனாவோ, சுப்பனாவோ இருந்தா சந்தேக வழக்கில் கைது பண்ணிட்டுப்போய் நாலு தட்டு தட்டலாம்... ஆனா, ரத்தினபூபதி இந்த பகுதியில் செல்வாக்குள்ள ஆள். உங்களுக்கே தெரியும்... அவனை எந்த கோதாவில் போய் விசாரிக்க முடியும்? அப்படியே போய் விசாரிச்சாலும், 'நான்தான் ரேகாவைக் கொன்னேன்'னு சொல்றதுக்கு உங்ககிட்டே என்ன பிடிமானம் இருக்குன்னு கேட்பானே! அந்தக் கேள்விக்கு நாம என்ன பதிலைச் சொல்ல முடியும்?"

ரத்தினகுமார் கசப்பாய் புன்னகைத்தான். "ஒண்ணும் ஒண்ணும் ரெண்டுன்னு சொல்ற மாதிரி ரத்தினபூபதியோட ஆட்கள்தான் ரேகாவைக் கொன்னு இருப்பாங்கன்னு நல்லா தெரியுது... ஆனாலும், நம்மாலே நடவடிக்கை எடுக்க முடியலை..."

பேசிக்கொண்டே வந்ததில், தோட்டத்தின் பின்பக்கம் வந்திருந்தது. சப்–இன்ஸ்பெக்டர், தன் கையிலிருந்த டார்சை உயிர்ப்பித்தார்.

"எந்த இடத்துல அந்த காலடித் தடத்தைப் பார்த்தீங்க!"

ரத்தினகுமார் ஜன்னலருகே கூட்டிப்போனான்.

"டார்ச்சை என் கையில கொடுங்க" கேட்டு வாங்கிய ரத்தினகுமார், மணல்பரப்பில் வெளிச்சத்தைக் கொட்டினான்.

ஆச்சரியப்பட்டான்.

சற்று நேரத்துக்கு முன்னால்– 'பளிச் பளிச்'சென்று

**புளிக்கு உப்பு!**

**புளியுடன் சிறிது கல் உப்பையும் போட்டு வைத்தால் புளி எளிதில் கெடாது.**

கண்களுக்குத் தென்பட்ட அந்த கால்தடங்களில் ஒன்றுகூட இந்த நிமிடம் இல்லை.

ரத்தினகுமார் சுற்றிச் சுற்றி வந்து டார்ச் ஒளியைக் கொட்டிப் பார்த்தான். கீர்த்திவாசனை ஏறிட்டு நெற்றியைச் சுருக்கினான்.

"இதே இடத்துலதான் நானும் ரேகாவும் காலடித் தடங்களைப் பார்த்தோம்... இப்போ யாரோ வந்து அழிச்சிட்டு போயிருக்காங்க..."

"சரி ரத்தினகுமார்... அப்படி யாராவது அழிக்க வந்திருந்தாலும், அவங்க காலடித் தடமாவது இங்கே இருந்திருக்கணுமே..."

"தேடிப் பார்த்தால் கிடைக்கும்."

சற்று முன்னால் ரேகாவும், ரத்தினகுமாரும் அந்த ஆசாமியைத் துரத்திக்கொண்டு ஓடியபோது பதிந்த கால் தடங்கள் மட்டுமே கண்களுக்குச் சிக்கின.

தோட்டத்தை முழுக்க ஒரு தரம் சுற்றிவந்தார்கள். தோட்டத்து வேலி ஏறி குதித்து- தொலைவில் ரேகாவின் உடலைச் சுற்றி நின்றிருந்த கும்பலை நோக்கிப் போனார்கள். இருவர் முகத்திலும் ஆயாசம், வர்ணம் அடித்திருந்தது.

கும்பலை நெருங்கினார்கள்.

போலீஸ்தனமான சடங்குகளை காவலர்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்க- பஞ்சாயத்துத் தலைவர் கார்மேகம், கும்பலின் மத்தியில் பிரதானமாய் தெரிந்தார். அருகே நின்றிருந்த காவலர்களிடம் சொல்லிக்கொண்டிருந்தார்.

"இந்த ஊர்ல யாருமே உயிரோடு இருக்க முடியாது போலிருக்கேய்யா... அவனவன் உயிரைக் கையில கெட்டியா புடிச்சுக்கிட்டுதான் நடக்கணும் போலிருக்கு... ராயப்பனோட குடும்பத்தை அடியோடு பொசுக்கி, நாலைஞ்சு நாள்கூட



ஆகலை... அதுக்குள்ளே முத்துக்குமார் வீட்டுக்கு வந்த வெளியூர் பொண்ணை சுட்டு கொன்னிருக்காங்க... என்னய்யா இது அக்கிரமம்? நான் இதை அமைச்சர் வரைக்கும் கொண்டுபோகப் போறேன்..."

லேசான சாராய நெடியோடு- சத்தம் போட்டுக்கொண்டிருந்த பஞ்சாயத்துத் தலைவர் கார்மேகத்தை சப்-இன்ஸ்பெக்டர் கீர்த்திவாசனும், ரத்தினகுமாரும் ஒரு 'லேசர்' பார்வை பார்த்தார்கள்.

## 9

இரண்டு வாரங்கள் காலத்தின் கால்களுக்குக் கீழே நழுவியிருந்தன.

ரத்தினகுமார் அந்த இரண்டு வார காலமும் சப்-இன்ஸ்பெக்டர் கீர்த்திவாசனோடு- பாறைப்பள்ளம் கிராமம் முழுக்க அலைந்து- ரத்தினபூபதியின் பண்ணையாட்களை விசாரித்து- எந்தவித பிடியும் கிடைக்காமல்- கிலோ கிலோவாய் ஏமாற்றத்தைச் சுமந்தபடி- அன்று சென்னைக்குத் திரும்பி- கமிஷனர் முன்பு நின்றிருந்தான்.

கமிஷனரின் உடம்பு கொதி நிலையில் இருந்தது.

"ஒரு குடும்பமே எரிஞ்சு சாம்பலாகி இருக்கு... நம்ம துறையைச் சேர்ந்த ஒரு பெண்ணைப் பலிகொடுத்திருக்கோம்... பதினைஞ்சு நாள் உங்க சொந்த ஊர்ல இருந்திருக்கீங்க. சந்தேகத்தின் பேர்ல ஒருத்தனைக் கூடவா உங்களாலே கைது பண்ண முடியலை?"

"முடியலை சார்" ரத்தினகுமாரின் தலை குனிந்திருந்தது.

"இல்லை... உங்க விசாரணையிலும், சப்-இன்ஸ்பெக்டர் கீர்த்திவாசனோட அணுகுமுறையிலேயும் எங்கேயோ தப்பு இருக்கு... அந்த பஞ்சாயத்துத் தலைவர் கார்மேகம்





எப்படிப்பட்ட ஆளு? ஆளை உரசிப் பார்த்தீங்களா?"

"பார்த்தோம் சார்..."

"என்ன சொல்றார்?"

"அவருக்கு ஆளுங்கட்சி ஆதரவு இருக்கு சார்... நாம ஏதாவது கேட்டா குதர்க்க மாவே பதில் சொல்றார். அவரையும் அவரோட ஆட்களையும் கண்காணிக்க போலீஸ் போட்டிருக்கு சார்..."

"ரத்தினபூபதியைப் பத்தி நீங்க என்ன நினைக்கிறீங்க?"

"நடந்த கொலைகளுக்கெல்லாம் அவர்தான் பொறுப்புன்னு நான் நினைக்கிறேன் சார்... எனக்கு ஒரு துரும்பு ஆதாரம் கிடைச்சாலும் போதும்- ஆளை கைது பண்ணி கொண்டு வந்துடலாம்."

கமிஷனர் வெடித்தார். "நான் திருப்திபடலை, மிஸ்டர் ரத்தினகுமார். நீங்களும் ரேகாவும் காரியத்தை வெற்றிகரமா முடிச்சுட்டு வருவீங்கன்னு நான் நினைச்சேன். ஆனா, நீங்க அந்தக் கொலைகாரக் கும்பலுக்கு ரேகாவை பலிகொடுத்துட்டு வந்து நிக்கிறீங்க."

"சாரி சார்..."

"இந்த சாரியை சொல்றதுக்காக நீங்க வெட்கப்படணும், ரத்தினகுமார்... இதுக்காகவா உங்களைச் சொந்த கிராமத்துக்கு அனுப்பி வைச்சேன்?"

அவர் பேசிக்கொண்டிருக்கும்போதே-

ரத்தினகுமார் தன் சட்டைப் பையிலிருந்த அந்தக் கடிதத்தை எடுத்து கமிஷனரிடம் நீட்டினான். அவர் நெற்றியைச் சுருக்கினார்.

"என்னது?"

"என்னோட ராஜினாமா கடிதம் சார்."

கமிஷனர் முகத்தில் அதிர்ச்சியைக் காட்டினார். "எதுக்காக ராஜினாமா பண்ணுறீங்க?"

"நடந்த தப்புக்கு நான்தான் பொறுப்பு சார். எனக்கு இந்த உத்தியோகம் லாயக்கில்லை சார். என்னைவிட திறமையான ஒருத்தரை அங்கே அனுப்பி..."

கமிஷனர் இடைமறித்தார்.

"நான் அதற்காக நடவடிக்கை எடுக்கிறேன். நீங்க உத்தியோகத்தை ராஜினாமா பண்ண வேண்டாம்."

"சாரி சார்..."

"மிஸ்டர் ரத்தினகுமார்... ஒரு நிமிடம் இருங்க."

"இல்லை சார்..." -ரத்தினகுமார் சொல்லிக்கொண்டே கடிதத்தை மேசை மீது வைத்துவிட்டு- நெற்றியில் நான்கு விரல்கள் பதித்து 'சல்யூட்' ஒன்றை விநியோகித்துவிட்டு, அறை வாசலை நோக்கிப் போனான்.

கமிஷனர் தன் மூக்குக் கண்ணாடியைக் சுழற்றி மேசை மேல் போட்டுவிட்டு- நடந்து போகிற ரத்தினகுமாரின் முதுகையே வெறித்தார்.

## 10

நெல் மூட்டைகளை வண்டியில் ஏற்றி அனுப்பிவிட்டு- வீட்டுக்குள் நுழைந்த முத்துக்குமார், கண்ணாடி முன் நின்று தலை சீவிக்கொண்டிருந்த நந்தாவைப் பார்த்ததும் ஆச்சரியமானான்.

"என்ன நந்தா... "எங்கேயாச்சும் கிளம்புறியா?" நந்தா தயக்கமாய் திரும்பி, சுவரோரமாய் ஒண்டினாள். "ஆமாங்க... நெல் அடிக்கிற பொன்னம்மாவும்- சரசாவும் சினிமாவுக்குப் போறாங்களாம்... வர்றியான்னு கேட்டாங்க... அதான் உங்ககிட்டே கேட்டுட்டுப் போகலாம்ன்னு..."

முத்துக்குமார் சிரித்தான்.

"இதுக்குப்போய் என்னைக் கேக்கணுமா? போயிட்டு வா...



[illegible] ஊர் கொட்டகைக்குத்தானே?"

"ஆமாங்க."

"பணம் வேணுமா?"

"இருக்குங்க."

"சினிமா பத்து மணிக்கு விடுவாங்க... வர்றப்ப இருட்டா இருக்கும்..."

"பொன்னம்மா கூடவே நான் வந்துடுறேன்..."

வேணுமானா நான் பத்து மணிக்கு தியேட்டர் வாசலுக்கு வரட்டுமா?"

"நீங்க வர்றீங்களா? வேண்டாம்."

"ஏன்?"

"யாராவது பார்த்தா தப்பா நினைப்பாங்க."

"எதுக்கு தப்பா நினைக்கிறாங்க? நீ இந்த வீட்டுல வேலை செய்யற பொண்ணு... ஊர் நிலவரம் கெட்டுக் கிடக்கு... பாதுகாப்புக்காக வர்றது தப்பா?"

நந்தா பேசாமல் மவுனித்தாள்.

"என்ன நந்தா... நான் கேட்ட கேள்விக்குப் பதிலையே காணோம்!" -முத்துக்குமார் கேட்க, நந்தா விழிகளில் நீர்கோர்த்தாள்.

"நான் ஒரு அநாதைங்க... எம்போல எதுக்காக அவ்வளவு கரிசனம்? இந்த வீட்டுக்காக உழைக்கப்போறேன்... மூணு வேளையும் என் வயித்தைக் கழுவுறதுக்காக நான் உங்க நிழல்ல ஒட்டி இருக்கேன்... அவ்வளவுதான்! பல்லக்கு தூக்குறவன் பல்லக்கில் உட்கார்ந்துக்க ஆசைப்படக்கூடாதுங்க."

அவன் சிரித்தான்: "சரி... சரி. நான் தியேட்டர் வாசலுக்கு வரலை. நீ கிளம்பு, நந்தா. இன்னிக்கு இராத்திரி ஒன்பது மணி பஸ்கல ரத்தினகுமார் வந்தாலும் வருவான், நான் வீட்டுல இருக்கணும்" மெதுவான குரலில் சொல்லிவிட்டு, நகரப்போன முத்துக்குமாரை "ஒரு நிமிடம்..." என்று கூறி நிறுத்தினாள், நந்தா.

அவன் நின்றான். நந்தா தயக்கமான குரலில் கேட்டாள்; கூடவே, ஒரு பயம்.

"நாளைக்கு நம்ம வீட்டுல என்ன விசேசம்?"

"எதுக்காக அப்படி கேட்கிறே?"

"இல்லே... ரெண்டு நாளா வெள்ளை அடிக்கிறாங்க. பெயிண்ட் வேலை நடந்திட்டிருக்கு. பண்டிகையோ, விசேசமோ ஒண்ணுமில்லை. அதான் கேட்டேன்."

"நாளைக்குப் பெரியவரோட பிறந்த நாள்."

"பெரியவருன்னா?"

"எங்கப்பா."

நந்தா ஏதோ சொல்வதற்குள், வாசலில் பொன்னம்மாவின் குரல் கேட்டது. "நந்தாம்மா... போலாமா?"

நந்தா அவசர அவசரமாய் நெற்றிக்குப் பொட்டு ஒன்றை இட்டுக்கொண்டு, எதிரே நின்றிருந்த முத்துக்குமாரிடம் விடைபெற்று வெளியே வந்தாள்.

வாய் நிறைய வெற்றிலைப் பாக்கை சிவப்பாய் குதப்பியபடி வாசலில் காத்திருந்த பொன்னம்மாள், நந்தாவைப் பார்த்ததும் அவசரப்படுத்தினாள்.

"சீக்கிரம் வாங்கம்மா... மணி ஆறாகப்போவுது... டிக்கெட் கிடைக்காது..."

"நான் வந்தாச்சு."

கிளம்பினார்கள். இருட்டு வேகவேகமாய் வந்து கொண்டிருந்தது.

நான்கைந்து தெருக்கள் தள்ளி, பொட்டல்வெளியில் உட்கார்ந்திருந்த கொட்டகையின் உச்சந்தலையில் சிக்கியிருந்த ஸ்பீக்கரின் வாயிலிருந்து 'மருதமலை மாமணியே முருகய்யா' என்று சோமு குழைந்துகொண்டிருந்தார். தியேட்டர் வாசலில் பெண்கள் கூட்டம்.

சுலபமாய் மூன்று டிக்கெட் வாங்கிக்கொண்டு வந்தான், நந்தா.



உள்ளே போய் உட்கார்ந்து- படம் ஆரம்பித்து பத்து நிமிடத்தில்-

நந்தா உட்கார்ந்திருந்த நாற்காலியைவிட்டு எழுந்தாள்.

"எங்கேம்மா போறீங்க?" -பொன்னம்மாள் கேட்டாள்.

சுண்டுவிரலைக் காட்டினாள், நந்தா.

"நானும் துணைக்கு வரட்டுமா?"

"வேண்டாம்... நீங்க படத்தைப் பாருங்க... நான் ரெண்டு நிமிடத்துல வந்துடுறேன்" சொல்லிக்கொண்டே கொட்டகையின் இருட்டில் நடந்து, வெளியே வந்தாள், நந்தா.

கொட்டகையைச் சுற்றிலும் இருட்டு. ஓரேயொரு டியூப்லைட் மட்டும் முகப்பில் எரிந்து, இருட்டை விரட்ட முயற்சி செய்துகொண்டிருந்தது.

'பெண்கள் கழிப்பிடம்' என்று சொன்ன மறைவை நோக்கி வேகவேகமாய்ப் போன நந்தா- நடுவே இருந்த ஒரு தட்டியின் மறைவுக்குப் போய்- தகரச் சுவருக்கு அப்பால் எட்டிப்பார்க்க- மறுபக்கம் சிகரெட் புகையும் கையோடு காத்திருந்த அந்த லுங்கி கட்டின பேர்வழி வேகவேகமாய் அவளை நெருங்கினான்.

"என்ன நந்தா?"

"ஒண்ணும் பேசாதே... இந்தா கடுதாசி... வாங்கிட்டுப் போயிட்டே இரு..."

"வேற ஏதாவது விசேசம்?" "எல்லாம் கடுதாசியில் எழுதி இருக்கேன்" படபடப்பாய் சொல்லிவிட்டு, வேகவேகமாய் தட்டியின் மறைவிலிருந்து வெளிப்பட்டு- கழிப்பிடத்திற்குப் போய்விட்டு- பொன்னம்மாளின் அருகே வந்து உட்கார்ந்தாள். நிதானமாக பெருமூச்சுவிட்டாள்.

பொன்னம்மாள் சொன்னாள்:

"நீங்க போயிட்டு வர்றதுக்குள்ளே நாகேஷ் தமாஷே முடிஞ்சுபோச்சம்மா."

நந்தா, திரையைப் பார்த்தாள்.

அந்தக்கால சரோஜாதேவி 'லவ் பேர்ட்ஸ்... லவ் பேர்ட்ஸ்' பாடிக்கொண்டிருக்க- நந்தாவின் இதயத் துடிப்பு ஏராளமாய் எகிறியது.

வியர்த்த முகத்தை சேலைத் தலைப்பால் ஒற்றிக் கொண்டாள்.

## 11

ரத்தினகுமார் வீட்டுக்குள் நுழைந்தபோது இரவு 9.30 மணி.

பகல் முழுவதும் பயணம் பண்ணினதில் தலையும், உடையும் தூசிப் படலத்தை வாங்கி இருந்தன. எதிர்காற்றில் அலம்பப்பட்ட கண்கள் சிவப்பேறி தெரிந்தன.

கயிற்றுக்கட்டிலில் உட்கார்ந்திருந்த முத்துக்குமார்- தன் தம்பி ரத்தினகுமாரைப் பார்த்ததும் எழுந்தான். "வாடா ரத்தினம்... என்ன பஸ் அரை மணி நேரம் தாமதமா?"

"ஆமா."

"ஏன் ஒரு மாதிரி இருக்கிறே ரத்தினம்?"

"அண்ணே..."

"சொல்லு."

"நான் உத்தியோகத்தை ராஜினாமா பண்ணிட்டேன்."

முத்துக்குமார் திடுக்கிட்டு நிமிர்ந்தான். "நீ..நீ... என்ன சொல்றே ரத்தினம்?"

"ஆமாண்ணே... தீர விசாரிச்சுட்டுத்தான் ராஜினாமா முடிவுக்கு வந்தேன்."

"நீ செஞ்சது சரியில்லை, ரத்தினம்."

"அண்ணே... இப்போ வீட்டுல யார் இருக்கா?"

"யாருமில்லை."

"நந்தா?"



"அவ சினிமாவுக்குப் போயிருக்கா."

"அப்போ பேசலாம்" என்றவன், கட்டிலில் தளர்வாய் உட்கார்ந்தான். அருகே முத்துக்குமார் உட்கார்ந்தான். கிசுகிசுப்பான குரலில் கேட்டான்:

"கமிஷனர் உன்னை ராஜினாமா பண்ணச் சொன்னாரா!"

"ஊஹூம்... அவர் சொல்லலை. நானாத்தான் பண்ணினேன். ரேகா செத்த விசயம் போலீஸ் துறைக்கு ரொம்பவும் அதிர்ச்சியா இருக்கு. அதை சமாதானப்படுத்தத்தான் நான் ராஜினாமா பண்ணினேன்."

"உம்மேலேயோ, எம்மேலேயோ போலீசுக்கு சந்தேகம் இல்லையே ரத்தினம்?" திரும்பித் திரும்பிப் பார்த்தபடி முத்துக்குமார் கேட்டான்.

"இந்த நிமிடம் வரைக்கும் சந்தேகம் வரலை."

"ரேகாவை வந்த அன்னிக்கே முடிச்சது ரொம்பவும் தப்பு ரத்தினம். நான் சொன்னேன். நீ கேக்கலை."

"அதுல எந்தத் தப்பும் இல்லேண்ணே. நீங்க சோலையார் அணையில எங்க ரெண்டு பேரையும் சுடுற மாதிரி 'பாவ்லா' பண்ணினதை வைச்சு நான் போலீஸ் நிலையத்தில் கொடுத்த புகார், ரத்தினபூபதிக்கு ஒரு பாதகமான விசயம். எங்க ரெண்டு பேரையும் சுட முயற்சி பண்ணினது ரத்தினபூபதியோட ஆட்கள்தான்னு தீர்மானமா முடிவாயிடுச்சு.

இராத்திரி படுத்துத் தூங்கிட்டிருந்த ரேகாவை தோட்டத்துப் பக்கமா சத்தம் எழுப்பி- விழிக்க வைச்சு- நானும் அவளுமா துப்பாக்கியோடு தோட்டத்துக்குப் போய்- ஏற்கெனவே நாம ஏற்பாடு பண்ணியிருந்த பண்ணையாள் மருதாசலத்தை ஓட வைச்சு, வேலி 'கேட்'டை தாண்டிக் குதிக்க வைச்சு- நானும் ரேகாவும் அவன் பின்னால் ஓடி- நீங்க எங்களைத் தேட வந்த மாதிரி இருட்டுல வந்து- ரேகாவைச் சுட்டுத்தள்ள- எல்லாமே கனகச்சிதம் அண்ணே! போலீஸ் துறைக்கு உங்க மேலேயும் சரி... எம்மேலேயும் சரி...

என் முனையளவுகூட சந்தேகம் வராது."

முத்துக்குமார் தீவிரமாய் தன் மோவாயைத் தேய்த்தான்.

"ரத்தினம்..."

"என்னண்ணே?"

"இனிமே ராயப்பன் குடும்பக் கொலை விசயமா எந்த போலீசும் இங்கே வரமாட்டானே?"

"நிச்சயமா மாட்டான்."

"நாம செஞ்ச தப்புக்கெல்லாம் உன்னோட உத்தியோகம் இதுநாள் வரைக்கும் கவசமா இருந்தது. இப்ப நீ அவசரப் பட்டுட்டே ரத்தினம்."

"இல்லேண்ணே... போலீஸ் துறையை திசை திருப்பி விடறதுக்கு என் ராஜினாமா ஒரு சாதனம். நம்ம ரெண்டு பேரோட குறிக்கோள்தான் நிறைவேறிடிச்சே? இனியும் எதுக்கு அந்தக் கவசம்? அதான் கழட்டி வீசிட்டேன்."

அவன் பேசிக்கொண்டிருந்த அதே விநாடி–

வாசல் காம்பவுண்டு கேட்டை கிரீச்சென்று யாரோ திறக்கும் சத்தம் கேட்டது.

இருவரும் திரும்பிப் பார்த்தார்கள். பொன்னம்மாவையும் சரசுவையும் வழியனுப்பிவிட்டு– நந்தா 'கேட்'டைச் சாத்திக்கொண்டு உள்ளே வந்தாள். வாசற்படியில் செருப்பு களை உதறிவிட்டு, தயக்கமாய் படியேறினாள்.

"என்ன நந்தா... சினிமா விட்டாச்சா?" முத்துக்குமார் கேட்டான்.

"சரி! சாப்பிட்டுப் போய்ப் படு..."

'சரி' என்னும் பாவனையில் தலையாட்டிக்கொண்டே வேகவேகமாய் உள் அறையை நோக்கிப் போனாள், நந்தா.

அவன் போகும்வரை அவளையே பார்த்துக்கொண்டிருந்த முத்துக்குமார், அவள் தலை மறைந்ததும் ரத்தினகுமாரிடம் திரும்பினான்.



"ரத்தினம்..."

"ம்..."

"ராயப்பனோட விவகாரத்தையும், ரேகா விவகாரத்தையும் கொஞ்ச நேரத்துக்கு மறந்துட்டு ஒரு புதிய விவகாரத்தைப் பத்தி பேசலாமா?"

"புது விவகாரமா?"

"ஆமா."

"என்ன விவகாரம்?"

"நான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன், ரத்தினம். பொண்ணு வேற யாருமில்லை, நந்தாதான்."

"அண்ணே..." முகம் மாறினான், ரத்தினம்.

"என்ன ரத்தினம் திகைச்சுப்போயிட்டே! அப்பாவோட ஆசைப்படி ராயப்பனோட குடும்பம் தழைக்காதபடி நம்ம ஆட்களைவிட்டுப் பொசுக்கி, சாம்பலாக்கிட்டோம்... இனிமே நானோ... நீயோ கல்யாணம் பண்ணிக்க என்னத் தடை? எனக்கு நந்தாவைப் பிடிச்சிருக்கு. யாருமில்லாத அநாதைப் பொண்ணு... எந்த பிக்கல் பிடுங்கலும் இருக்காது..."

"நந்தாகிட்டே இந்த கல்யாண விசயத்தைப் பத்திக் கேட்டீங்களா?"

"இனிமேதான் கேட்கணும்."

"அண்ணே! ராயப்பனோட வழக்கு என்ன ஆகுதுன்னு பார்த்துட்டுக் கல்யாணத்தைப் பத்தி பேசலாமே?" –தாழ்ந்த குரலில் கிசுகிசுத்தான், ரத்தினகுமார்.

"ராயப்பனோட வழக்கை பொறுத்தவரைக்கும் போலீஸ் வேடிக்கை பார்த்திட்டிருக்க வேண்டியதுதான். அதையும் மீறி எவனாவது இந்த எல்லைக்குள்ளே நுழைஞ்சான்னா... நம்ம வேட்டைத் துப்பாக்கி துப்புற தோட்டாவை நெஞ்சக் குழியில வாங்கிக்கிட்டு, ரேகா மாதிரி பரலோகம் போயிட வேண்டியதுதான்."

சுவர்க் கடிகாரம் பத்து மணியை அடிக்க-

ரத்தினகுமார் எழுந்தான்.

"அண்ணே... நான் குளிச்சுட்டு வாரேன். ஒண்ணா சாப்பிடுவோம்."

"சாப்பிட்டதும் இன்னொரு முக்கியமான வேலை இருக்கு ரத்தினம்."

"என்னண்ணே?"

"அப்பாவுக்கு அஞ்சலி."

"எத்தனை மணிக்கு?"

"பதினொரு மணிக்கு."

"அஞ்சலி செலுத்திடுவோம்" தலையாட்டிக்கொண்டே ரத்தினகுமார் நடந்தான். தம்பி நகர்ந்ததும், முத்துக்குமார் எழுந்து உள்ளே போனான்.

நான்கைந்து அறைகளைக் கடந்ததும்- எதிர்ப்பட்ட சமையலறைக்குள் நுழைய- சாப்பிட்டுக்கொண்டிருந்த நந்தா தெரிந்தாள். முத்துக்குமாரைப் பார்த்ததும் அவசர அவசரமாய் எழுந்தாள்.

"பரவாயில்லை... சாப்பிடு நந்தா."

"சாப்பிட்டாச்சுங்க" -சொல்லிக்கொண்டே தட்டைக் கழுவி- கையையும், வாயையும் சேலைத் தலைப்பால் துடைத்துக் கொண்டாள்.

"சினிமா நல்லா இருந்ததா, நந்தா?"

"ம்..."

"நான் உன்கூட கொஞ்சம் பேசணும், நந்தா."

அவள் குழப்பமாய் அவனைப் பார்த்தாள். 'பேசுங்களேன்' என்பது போல கண்களை அவன்மேல் நிறுத்தினாள். முத்துக்குமார் தொடர்ந்தான்.

"நான் உன்னை முதல் தடவையா பார்த்த அன்னிக்கே



கொஞ்சம்கூட யோசிக்காம இந்த வீட்டுல வேலை செய்யச் சொல்லி ஒத்துக்கிட்டேன். அதுக்கு என்ன காரணம் இருக்க முடியும்னு நீ நினைக்கிறே, நந்தா?"

நந்தா மெல்லப் புன்னகைத்தாள்.

"எம்மேல நீங்க காட்டின இரக்கம்தான் காரணம்."

"அது ரெண்டாவது காரணம்... முதல் காரணம் என்ன தெரியுமா?"

"என்னங்க?"

"உன்னை எனக்குப் பிடிச்சிருந்தது."

"........"

"கல்யாணத்தைப் பத்தின சிந்தனையே இல்லாமே இருந்த எனக்கு நீதான் அந்த சிந்தனையைக் கிளப்பிவிட்டே... ரெண்டு ஆண்கள் இருக்கிற வீட்டுல ஒரு வயசுப் பொண்ணு கல்யாணம் ஆகாமே இருக்கக்கூடாது. நீ விருப்பப்பட்டா எனக்குக் கழுத்தை நீட்டலாம்..."

நந்தா பூரிப்பில் திணறினாள்.

"நான் சொல்றது நிஜம்தான், நந்தா. நம்ம கல்யாண [illegible] ஊரிலிருந்து வந்த என் தம்பி ரத்தினகுமார்கிட்டேயும் பேசிட்டேன்."

"அ...அ...அவர்... எ...என்ன சொ...சொன்னார்?"

"அவனுக்கும் சம்மதம்தான்... நீ என்ன சொல்றே, நந்தா?"

"நா...நான் உங்க வீட்டுல வேலை செஞ்சு வயித்தைக் கழுவ வந்த அநாதைங்க... எனக்குன்னு சொந்த ஜனம் யாரும் கிடையாது."

"அந்தப் பழைய பேச்சையெல்லாம் பேசிட்டிருக்காதே நந்தா! என்னைக் கல்யாணம் பண்ணிக்க உனக்கு இஷ்டமா?"

"........"

"அவசரப்படாதே... இன்னிக்கு இராத்திரி பூராவும் யோசி...

"நாளைக் காலையில உன் பதிலைச் சொல்லு, போதும்."

நந்தா திக்பிரமை பிடித்து நிற்க-

முத்துக்குமார் ஒரு சிரிப்போடு நகர்ந்தான்.

## 12

இராத்திரி பதினொரு மணி.

பங்களா முழுவதும் நிசப்தம் நிரவிக் கிடந்தது. தோட்டத்தைச் சுற்றிலும் 'ரொய்ங்... ரொய்ங்' என்று சுவர்க்கோழிகள் கத்திக்கொண்டிருக்க- ரத்தினகுமார் தன் அறையினின்றும் வெளிப்பட்டான்.

கயிற்றுக்கட்டிலில் உட்கார்ந்திருந்த முத்துக்குமார், மார்புக்கு சால்வையைப் போர்த்திக்கொண்டே எழுந்தான்.

"என்ன ரத்தினம்... புறப்படலாமா?"

"ம்... நந்தா தூங்கிட்டாளா? முழிச்சிட்டிருக்காளா?" -ரத்தினகுமார் சந்தேகக் குரலில் கேட்க- முத்துக்குமார சொன்னான்:

"ஒரு நிமிடம் நீ இங்கே நில்லு ரத்தினம். நான் போய் அவ அறையை ஒரு பார்வை பார்த்துட்டு வர்றேன்."

முத்துக்குமார் இருட்டான அறையில் நடந்து போய்- கோடியில் இருந்த அறைக்கு முன் நின்றான். பாதி திறந்திருந்த ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தான்.

உள்ளே நந்தா ஒருக்களித்துப் படுத்து, ஆழ்ந்த தூக்கத்தில் இருப்பது தெரிந்தது. மேலே மின்விசிறி சாவதானமாய் சுழன்று கொண்டிருந்தது. ஒரு நிமிட நேரம் அவளையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு- திரும்பவும் நடந்து ரத்தினகுமாரிடம் வந்தான்.

"அவ தூங்கிட்டிருக்கா."



"புறப்படலாமா?"

"ம்..."

வெளியே வந்தார்கள். வராந்தாவில் நடந்து, அதன் மையத்தை அடைந்ததும்- சுவரின் மேற்பரப்பில் இருந்த மெயின் சுவிட்ச் போர்டு முன் நின்றார்கள். அந்த போர்டின் மறைவுக்குப் பின்னால் தெரிந்த அந்த சின்ன பொத்தானை அழுத்தினான், ரத்தினகுமார்.

அடுத்த விநாடி- சினிமா படங்களில் வருகிற மாதிரி... வராந்தாவின் கோடியில் இருந்த கடப்பைக்கல்களில் ஒன்று மெதுவாய் உயர்ந்து, வாயைத் திறக்க- ரத்தினகுமாரும், முத்துக்குமாரும் சுற்றும் முற்றும் பார்த்துக்கொண்டு அதை நோக்கிப் போனார்கள்.

முத்துக்குமார் அந்த சதுர வாய்க்குள் காலை நுழைத்து- தட்டுப்பட்ட மரப்படிகளில் மெதுவாய் இறங்கினான். தொடர்ந்து ரத்தினகுமார் இறங்கினான்.

மரத்தாலான மாடிப்படிகள் 'டொம் டொம்' என்று அவர்களுடைய காலடிச் சத்தங்களை எதிரொலித்தது. சில விநாடிகளுக்குள் மரப்படிகள் முடிந்துபோய்- தரைப் பகுதி வந்ததும் ரத்தினகுமார்- அங்கிருந்த பொத்தானைத் தட்டினான்.

மேலே இருந்த கடப்பைக்கல் தன் வாயைக் கொஞ்சம் கொஞ்சமாய் மூடிக்கொள்ள- உள்ளே மெல்ல மெல்ல இருள் பரவியது.

"அண்ணே! அந்த சுவிட்சை போடுங்க."

முத்துக்குமார் தடுமாற்றமில்லாமல் இருட்டில் நடந்து போய், சுவரின் ஏதோ ஒரு பகுதியைப் போய்த் தொட்டான்.

அடுத்த விநாடி-

சிவப்பு விளக்கு ஒன்று உயிர்பிடித்து, இரத்தமாய் ஒளிர- அறை முழுவதும் இளஞ்சிவப்பு வெளிச்சம் பரவியது.

கொஞ்சம் பெரிய அறை.

அறையின் நடுவே அந்த சமாதி தெரிந்தது. புதிதான வர்ணப் பூச்சு... அகல் விளக்கொன்று சோம்பலாய் எரிந்து கொண்டிருந்தது. சமாதி மேலே பூமாலை சாத்தப்பட்டு, லேசாய் வாடியிருந்தது.

"ஏண்ணே... காலையில இங்கே வந்தீங்களா?"

"ஆமா... பெயிண்ட் வேலை கொஞ்சம் பாக்கி இருந்தது. நந்தா களத்துமேட்டுக்குப் போனபின்னாடி இங்கே வந்தேன். வேலையை முடிச்சுட்டு, மாலை போட்டுட்டுப் போனேன்."

ரத்தினகுமார் மவுனமாய் அந்த சமாதி முன்னால் போய் நின்றான். "அப்பா..." என்று பேச ஆரம்பித்தவன் கண்களில் நீர்கோர்த்தது.

"இந்த ஊருக்கும் உலகத்துக்கும் நீங்க காணாமேபோய் இன்னும் கிடைக்காதவங்க. நீங்க இறந்ததோ... நம்ம வீட்டுக்குக் கீழே இருக்கிற அறையில அடக்கமாகி இருக்கிற விசயமோ என்னையும், அண்ணனையும் தவிர வேறு யாருக்குமே தெரியாது. நம்ம வீட்டு நகைகளுக்காக ஆசைப்பட்டு வீடு புகுந்து கொள்ளையடிச்ச ராயப்பனையும், அவனோட மகன்களையும் நீங்களும், அம்மாவும் தடுத்தீங்க...

உங்களைக் கட்டிப்போட்டுட்டு உங்க கண் முன்னாடியே அம்மாவை வைக்கோல் போர்ல தள்ளி தீ வைச்சு கொளுத்தின அந்தக் கொடுமை நடந்து சில ஆண்டு ஓடிச்சு... சென்னையில் இருந்த நானும், விருதுநகர் சந்தைக்கு விதைநெல் வாங்கப் போயிருந்த அண்ணனும் விசயத்தைக் கேள்விப்பட்டதும் பதறியடிச்சுட்டு ஓடிவந்தோம். கருகிக்கிடந்த அம்மாவுக்குப் பக்கத்துல புத்தி பேதலிச்சுப்போய் நின்னீங்க.

இந்தக் கொடுமையை செஞ்சது யாருப்பான்னு கேட்டுத் துடிச்சோம்... உங்களால் சொல்ல முடியலை... அம்மா பேரைச் சொல்லிக்கிட்டே வாராந்தாவில் விழுந்து கிடந்தீங்க... அன்னிக்கு இராத்திரி பண்ணையாள் சோமுதான், 'வந்தது ராயப்பனோட குடும்பம்'' என்கிற உண்மையைச் சொன்னான். ஆனா, நாங்க போலீசுக்குப் போக விரும்பலை... அந்த ராயப்பனையும்,



அவனோட குடும்பத்தையும் உங்கக் கண் முன்னாடி கொளுத்தி சாம்பலாக்க நானும் அண்ணனும் முடிவு பண்ணினோம்... ஆனா, ஒரு வாரத்துக்குள்ளே நீங்க இறந்துட்டீங்க..."

முத்துக்குமார், ரத்தினகுமாரின் தோள் மேல் கையை வைத்தான். "ரத்தினம்... நீ இந்த இடத்துக்கு வந்தாலே ரொம்பவும் உணர்ச்சிவசப்படுறே... போய் அந்த டி.வி.யையும் 'டெக்'கையும் கொண்டு வா."

ரத்தினகுமார் கண்களை துடைத்துக்கொண்டு நகர்ந்தான். சுவரோரமாய் 'பிளாஸ்டிக்' உறைக்குள் தூங்கிக்கொண்டிருந்த அந்த சிறிய டி.வி.யையும், 'சி.டி.'யையும் தூக்கி வந்தான்.

"மேலே வை ரத்தினம்."

டி.வி.யை சமாதி மேல் வைத்தான், ரத்தினகுமார்.

"அந்த அலமாரியைத் திறந்து, 'சி.டி.'யை எடுத்துட்டு வா"– சொன்ன முத்துக்குமார், டி.வி. உயிர் பெறுவதற்கான இணைப்புகளைக் கொடுக்க, ரத்தினகுமார் அருகே இருந்த 'சி.டி.'யை எடுத்து வந்து 'டெக்'கில் சொருகினான்.

பட்டனைத் தட்டினான்.

சி.டி. சுழல– டி.வி. உயிர்ப் பெற்றது. திரையில் அந்தக் காட்சி விழுந்தது.

இருட்டில் விழுந்து கிடந்த அந்த வீட்டைச் சுற்றிலும் தீப்பந்தங்களோடு ஆட்கள் நெருங்கிக்கொண்டிருந்தார்கள். அருகே வந்ததும், ஏதோ பேசிக்கொண்டார்கள். வீட்டைச் சுற்றிலும் பரவினார்கள். தீப்பந்தங்கள் ஒரே நேரத்தில் வீட்டின் கூரையை நோக்கி வீசப்பட– அதைத் தொடர்ந்து ஆவேசமான தீ.

முத்துக்குமார் உணர்ச்சிவசப்பட்டான். "பாருங்கப்பா... அந்த அயோக்கியனோட வீடு தீப்பிடிச்சி எரியறதைப் பாருங்கப்பா... அவனும், அவனோட குடும்பமும் போடுற அலறல் சத்தம் கேட்குதாப்பா... கேளுங்கப்பா... நல்லா கேளுங்க..."

டி.வி. திரையில் ராயப்பன் வீடு சடசடவென்று எரிந்துகொண்டிருந்தது. உள்ளே இருந்து தெளிவில்லாத

சத்தங்கள். அலறல்கள்.

"அப்பா... உங்க ஆத்மா இதைப் பார்த்திட்டிருக்கும்னு நாங்க நம்புறோம். பாருங்கப்பா... அந்த அயோக்கியனோட கடைசி வாரிசைக்கூட நாங்க விட்டுவைக்கலை... நம்ம பண்ணையாட்களை வைச்சு, சாம்பலாக்குகிற திருப்பணியைப் பாருங்கப்பா..."

ரத்தினகுமாரின் கண்களும், முத்துக்குமாரின் கண்களும் டி.வி. திரைமேல் விழுந்து, நெருப்புக் கங்குகளாய் ஒளிர்ந்து கொண்டிருந்தன.

ராயப்பனின் வீடு முழுதுமாய் எரிந்து சாம்பலாகும் வரை சி.டி. ஓடியது. சி.டி. முடிந்து வெளிச்சக் கிறல்கள் திரையில் தோன்றியதும், டி.வி.யை அணைத்தான், ரத்தினகுமார். திரும்பி தனக்குப் பின்னால் நின்றிருந்த முத்துக்குமாரைப் பார்த்தான்.

"நல்லா எடுத்து இருக்கீங்கண்ணே..."

முத்துக்குமார் புன்னகைத்தான்.

"ராயப்பன் வீட்டுக்குப் பக்கத்திலே அந்த அடர்த்தியான எச்சம் புதரும்– மறைவா இருந்த அந்த குட்டிச் சுவரும் எனக்கு வசதியா இருந்தது. ரத்தினம்... படமாக்கி முடியறவரை எவனும் அந்தப் பக்கம் வரலை..."

"ஒவ்வொரு மாசமும் அப்பா இறந்த தேதியில இந்த சி.டி.யைப் போட்டுப் பார்க்கணும் அண்ணே... அப்பத்தான் என் மனசு ஆறும்."

## 13

**ம**றுநாள் காலை ஏழு மணி.

நந்தா கொண்டுவந்து கொடுத்த காப்பியை உறிஞ்சிவிட்டு மெல்லிய குரலில் கேட்டான், முத்துக்குமார்.

"என்ன முடிவு பண்ணி இருக்கே நந்தா?"



நந்தா மவுனமாய் நின்றிருந்தாள்.

"சொல்லு நந்தா."

"உங்களைக் கல்யாணம் பண்ணிக்க எனக்குத் தகுதி இருக்கான்னு யோசிக்கிறேன்."

"நிச்சயமா தகுதி இருக்கு."

"எதை வைச்சு சொல்றீங்க?"

"நீ ஒரு பெண். இந்தத் தகுதி போதாதா?"

"ஒண்ணுமில்லாத என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா பின்னாடி நீங்கதான் வருத்தப்படணும்..."

"நான் வருத்தப்படமாட்டேன்."

"அந்த நம்பிக்கை உங்களுக்கு இருந்தா... நான் கல்யாணத்துக்கு சம்மதிக்கிறேன்."

மலர்ந்தான், முத்துக்குமார்.

"ஆனா... ஒரு நிபந்தனை" என்றாள், நந்தா.

"என்ன?"

"கல்யாணம் எளிமையா நடக்கணும்."

"சரி, எளிமையா நடத்திடலாம்."

"கல்யாண மண்டபம் வேண்டாம்... கோயில்லதான் கல்யாணம் நடக்கணும்."

"எந்தக் கோயில்னு நீயே சொல்லிடு."

"திருமூர்த்தி மலை."

"உன் விருப்பப்படியே வைச்சுக்கலாம்... கல்யாண தேதியை நான் சொல்லட்டுமா, நந்தா"

"சொல்லுங்க!"

"வர்ற அஞ்சாந் தேதி..."

நந்தா மனசுக்குள் கணக்குப் போட்டுப் பார்த்தாள். நெற்றியில் ஆச்சரியத்தைக் காட்டினாள். "இன்னும் ஒரு வாரம்தானே இருக்கு?"

## முதல் உலோகம்

நாம் தற்போது இரும்பு, அலுமினியம், தாமிரம், பித்தளை, எவர்சில்வர் எனப் பல உலோகங்களை அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்துகிறோம். ஆனால், மனிதன் முதன் முதலில் கண்டுபிடித்த உலோகம் எது தெரியுமா? தாமிரம்.

"இருந்தா என்ன? ஒரு வாரத்துல கல்யாணத்தை நடத்த முடியாதா என்ன? நீ வேறே கல்யாணம் எளிமையா இருந்தா போதும்ன்னு சொல்லிட்டே! உனக்குப் பட்டுச்சேலை எடுக்க, தாலி செய்ய ஒரு வாரம் போதாதா?"

"போதும்" என்றாள்.

"இன்னிக்குச் சாயந்தரம் நாம பொள்ளாச்சி போறோம்... துணி எடுக்கிறோம்..."

"நான் வரலை... நீங்களே போய் எடுத்துட்டு வந்துடுங்க" சொல்லிவிட்டு, நந்தா நகர முயன்றாள்.

"நில்லு நந்தா!"

நின்றாள்.

"என்னைக் கல்யாணம் பண்ணிக்க முழு இஷ்டம்தானே? நான் உன்னை கட்டாயப்படுத்தினதா நீ நினைக்கக்கூடாது."

"நான் அப்படி நினைக்கலை... ஒரு அநாதைப் பொண்ணுக்கு உங்ககிட்டே புகலிடம் கிடைச்சதே ஒரு சந்தோசமான விசயம்... அந்தப் பொண்ணுக்குக் காலம் பூராவும் துணையாகவும் வர்றீங்க... இதைவிட மகிழ்ச்சி வேறென்ன இருக்க முடியும்?"

சிரித்தான் முத்துக்குமார்: "இதோ பார் நந்தா! இன்னியிலிருந்து நீ கணக்குப்பிள்ளைக்கு உதவியா போக வேண்டாம்... வீட்டுலேயே இரு... சமையலைக் கவனி. அடிக்கடி காப்பி, டீ, மோருன்னு தந்து என்னைக் கவனி, போதும்."

"சரிங்க!"

நந்தா தலையாட்டிவிட்டு வெட்கத்தோடு நடந்தாள்.



## 14

ஐந்தாம் தேதி அதிகாலை 5.30 மணி.

வீட்டு வாசலில் வாடகை கார் காத்திருக்க- முத்துக்குமார் அவசரப்படுத்திக்கொண்டிருந்தான். உள்ளே எட்டிப் பார்த்துக் கத்தினான்.

"நந்தா... ஆச்சா? இன்னும் ஒரு மணி நேரத்துல நாம திருமூர்த்தி மலையில இருக்கணும்."

"இதோ வந்துட்டேன்ங்க" சொன்னபடியே வெளியே வந்தாள், நந்தா. பட்டுச்சேலையில் தகதகத்தாள். தலையில் உட்கார்ந்திருந்த மல்லிகைப் பந்து கும்மென்று மணத்தது.

"நீ பண்ணிக்கிற அலங்காரத்துல முகூர்த்த நேரம் தவறிடும் போலிருக்கு... நந்தா... ம்... சீக்கிரமா வந்து கார்ல ஏறு..."

நந்தா வாசலில் நின்றிருந்த காரில், பின்கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனாள். டிரைவர் இருக்கைக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த ரத்தினகுமார் புன்னகைத்தான்.

"அண்ணிக்கு என் வாழ்த்துகள்."

நந்தா பதிலுக்குப் புன்னகைத்து, வெட்கத்தோடு தலையைக் குனிந்துகொள்ள- வீட்டைப் பூட்டிக்கொண்டு, முத்துக்குமார் வேகவேகமாய் வந்து ஏறி, நந்தாவுக்குப் பக்கத்தில் உட்கார்ந்தான்.

"அண்ணே... வீட்டை நல்லா பூட்டிட்டீங்களா?"

"ம்..."

"டிரைவர்... கொஞ்சம் சீக்கிரமா போகணும்."

"போயிடலாம் சார்..." டிரைவர், காரைக் கிளப்பினார். கிராமத்தைக் கடக்கிறவரை மெதுவாய் ஊர்ந்துவிட்டு, பின் வேகம் பிடித்தது.

ஏறக்குறைய ஒரு மணி நேரப் பயணம்.

சூரியன் கிழக்குத் திசையை இரத்தக்களரியாக்கிக் கொண்டிருக்கும்போது- கார், திருமூர்த்தி மலையைத் தொட்டது.

அழைத்திருந்த சொற்ப பேர் மட்டும் கோயில் வாசலில் காத்திருக்க– முத்துக்குமார் எல்லோரையும் கும்பிட்டுக் கொண்டே பட்டுவேட்டி– சட்டை சரசரக்க இழே இறங் கினான். அவனைத் தொடர்ந்து நந்தா வந்தாள்.

"மாப்பிள்ளையும் பொண்ணுமே தாமதமா வந்தா எப்படி?" கும்பலில் யாரோ சொல்ல, சிலர் சிரித்தார்கள். டிரைவரிடம் ஏதோ கூறிவிட்டு வந்த ரத்தினகுமார், அவசரப்படுத்தினான்.

"வாங்க... வாங்க... மணி ஆறரை ஆயிடுச்சு... ஏழு மணிக்குள், முகூர்த்தத்தை முடிக்கணும்."

எல்லோரும் நகர முயன்ற விநாடி–

நந்தா குரல் கொடுத்தாள்.

"ஒரு நிமிடம்..."

எல்லோரும் நின்றார்கள்.

முத்துக்குமார் கேட்டான்:

"என்ன நந்தா?"

"உங்களுக்குத் தெரிஞ்சவங்க எல்லாரும் வந்துட்டாங்க... சொந்தக்காரங்களும் வந்துட்டாங்க... என்னோட சொந்தக்காரங்களும், தெரிஞ்சவங்களும் இந்தக் கல்யாணத் துக்கு வரவேண்டாமா?"

முத்துக்குமாரும், ரத்தினகுமாரும் திடுக்கிடலாய் நந்தாவைப் பார்த்தார்கள். முத்துக்குமார் முகம் மாறினான்: "நந்தா! நீ என்ன சொல்றே? உனக்கு சொந்தக்காரங்க இருக்காங்களா? யாருமே இல்லேன்னு சொன்னே?"

"சாரி... இப்பத்தான் ஞாபகம் வருதுங்க... எனக்கு நெருங்கின சொந்தக்காரர் ஒருத்தரும்– தெரிஞ்ச சிலபேரும் இந்தக் கல்யாணத்துக்கு வருவாங்க."

முத்துக்குமார் எரிச்சலானான்:

"யார் அந்த நெருங்கின சொந்தம்?"

"என் கணவன்."

கும்பலில் குபீர் மின்சாரம் பாய்ந்தது.



## 15

நந்தா... நீ என்ன சொல்றே?"

முத்துக்குமாரின் முகம் 'ஜில்'லென்று வெளுத்திருந்தது. ரத்தினகுமாரின் முகம் வெருவாய் மாறி இருந்தது. கும்பல், அதிர்ச்சியில் உறைந்துபோயிருந்தது.

"நான் நிஜத்தைச் சொல்றேன்... என் கணவரும், எனக்கு வேண்டியவங்களும் சரியா ஆறரை மணிக்கு வர்றேன்னு சொன்னாங்க" என்று புன்னகையோடு சொன்னவள், ஆர்வமாய்க் கை காட்டினாள். "அதோ வந்துட்டாங்க..."

நந்தா கை காட்டிய பக்கம் எல்லோரும் திரும்பிப் பார்க்க– அந்த நீலநிற கார் விர்ரென்று சீறிக்கொண்டு வந்து கோயில் வாசலில் நின்றது. புழுதி கிளப்பியது.

காரின் நான்கு பக்கக் கதவுகளும் படார் படாரென்று திறந்து கொள்ள– சப்-இன்ஸ்பெக்டர் கீர்த்திவாசனும், சென்னை போலீஸ் சூப்பிரண்டு பைரவமூர்த்தியும்– இரண்டு காவலர் களும்– கடைசியாய், வெள்ளை பேண்டு, சட்டையில் அந்த இளைஞனும் இறங்கி, நந்தாவை நோக்கி வந்தார்கள்.


காவலர்கள் சூழ்ந்துகொள்ள– நந்தா எஸ்.பி. பைரவமூர்த்தியைப் பார்த்து விறைப்பாகித் தளர்ந்தாள். பிறகு சொன்னாள்:

"சார்.. இவர் முத்துக்குமார்... மிஸ்டர் ரத்தினகுமாரை ங்களுக்கு முதலிலே தெரியும். முன்னாள் போலீஸ் அதிகாரி."

பைரவமூர்த்தி, சப்-இன்ஸ்பெக்டர் கீர்த்திவாசனைப் பார்த்துக் கண்ணைக் காட்ட, அவர் கையிலிருந்த விலங்கோடு அவர்களை நெருங்கினார்.

"ராயப்பனோட குடும்பத்தைத் தீயிட்டுக் கொளுத்திக் கொன்ற குற்றத்துக்காகவும், கிரைம் பிராஞ்ச் ரேகாவைச் சுட்டுக் கொன்ற கொடூரத்துக்காவும் உங்களைக் கைது பண்ணுறோம்..."

முத்துக்குமார் வியர்த்துச் சிரித்தான்.





"என்ன சொல்றீங்க சார்?"

எஸ்.பி. பைரவமூர்த்தி தன் தாடைப் பிரதேசத்தைத் தடவிக் கொண்டே சொன்னார்: "இனிமே நீங்க பேச்சை மழுப்பிப் பயனில்லை, முத்துக்குமார்.. நீங்க நினைக்கிற மாதிரி இவங்க நர்ஸ் கிடையாது. திருமதி வீனா ராபர்ட், புலனாய்வு போலீஸ் அதிகாரி கல்யாணமானவர். இவர் ராபர்ட். இவரும் அதே போலீஸ் அதிகாரி" வெள்ளை உடை இளைஞனைக் காட்டினார், எஸ்.பி.

முத்துக்குமாரும், ரத்தினகுமாரும் தங்கள் முகங்களில் இருந்த இரத்தத்தைப் பூராவும் தொலைத்துவிட்டு வெளிறிப்போய் நின்றார்கள்.

பைரவமூர்த்தி தொடர்ந்தார்: "பாறைப்பள்ளத்தில் ராயப்பனோட குடும்பம் மொத்தமும் எரிக்கப்பட்ட செய்தி சி.பி.ஐ.க்கு கிடைச்சதுமே அவங்க சுறுசுறுப்பா செயல்பட ஆரம்பிச்சாங்க... பாறைப்பள்ளம் கிராமத்திலேயே ஒரு அநாதைப் பெண் மாதிரி தங்கி உண்மைகளைச் சேகரிக்க விரும்புறதா மிசஸ் வீனா ராபர்ட் சொன்னாங்க... அந்த யோசனையை ஒத்துக்கிட்டு, நாங்க ஒத்துழைப்பு கொடுக்க ஆரம்பிச்சோம். வீனா ராபர்ட் அந்த கிராமத்திற்குப் போகிற விசயம் என்னை மாதிரியான, உயர் போலீஸ் அதிகாரிகளுக்கு மட்டுமே தெரியும்."

பேச்சை நிறுத்திவிட்டு மறுபடியும் தொடர்ந்தார், எஸ்.பி. "அந்தப் பாறைப்பள்ளம் கிராமத்துல வீனா ஒரு பாதுகாப்பான இடத்துல இருக்கணும்ன்னு விரும்பினோம், ரத்தினகுமாரோட வீட்டை தேர்ந்தெடுத்தோம். வழக்கு விசயமா ரத்தினகுமாரும், ரேகாவும் கிராமத்துக்குப் புறப்பட்டாலும்- அவர்களுக்கும் வீனா ஒரு சி.பி.ஐ. என்பது தெரியக்கூடாது என்று விரும்பினோம். ரத்தினகுமாரோட அனுதாபத்தையும் ஊர் மக்களோட அனுதாபத்தையும் பெற வேண்டி- தன்னை நான்கு பேர் கெடுக்க முயற்சித்ததாய்- ஒரு சிறிய நாடகத்தை அரங்கேற்றினார், வீனா.

ஏற்கெனவே விசாரிச்சு வைச்ச தகவல்படி- செத்துப்போன

லெட்சுமய்யாவை வீனா தனக்கு மாமாவாக்கிக்கொண்டார். விளைவு, ரத்தினகுமார் வீட்டில் வீனாவுக்கு அடைக்கலம். ஆரம்பத்துல வீனாவுக்கு சோலையார்புரம் ரத்தினபூபதி மேலேயும், பஞ்சாயத்துத் தலைவர் கார்மேகத்து மேலேயும் நிறைய சந்தேகம். ஆனால், ரேகாவோட கொலைக்குப் பின் அந்த சந்தேகம் முத்துக்குமார் மேல் திரும்பியது. வீனா களத்துமேட்டில் வேலை பார்த்துக்கொண்டே விசயங்களைச் சேகரிக்க ஆரம்பிச்சார்.

உங்கப்பாவோட இரகசிய சமாதி– அதுக்கு நீங்க செஞ்ச அஞ்சலி பற்றி எல்லாமே தகவல் அனுப்பிட்டாங்க... விசயம் வெளியே கொஞ்சம் கசிந்தாலும், தான் அந்த கிராமத்தை விட்டு உயிரோடு வரமுடியாதுன்னு உணர்ந்த அவர், உங்க ரெண்டு பேரையும் இங்கே கொண்டுவர்றதுக்காக– கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டார்."

பைரவமூர்த்தி சொல்லிக்கொண்டிருக்கும்போதே–

வீனா–

கொஞ்சம் தள்ளி நின்றிருந்த தன் கணவன் ராபர்ட்டை நோக்கிப் போனாள். அவன் கையைப் பற்றி மெல்ல முத்தமிட்டாள்: "சாரி டியர்!"

"எதுக்கு சாரி?" –அந்த அழகான ராபர்ட் சிரித்தான்.

"கல்யாணப் பெண் கோலத்துல, ஒரு 'கிரிமினல்'. கூட உட்கார்ந்துட்டு வந்ததுக்காக."

"இல்ல வீனா... உன்னை நினைச்சு பெருமைப்படுறேன்" என்றான்.

அந்த வார்த்தைகளை ஆமோதிக்கிற வகையில் திருமூர்த்தி மலையின் உச்சியிலிருந்து 'டாண் டாண்' என்று புறப்பட்ட கோயில் மணிச் சத்தம், அந்த கிறிஸ்தவ தம்பதிகளை பூரிப்பில் நனைத்தது.

**(முடிந்தது)**

---

ராணி சென்டிகேட் சார்பில் வெளியிட்டவர், ஆசிரியர்: அ.மா. சாமி, 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007. அச்சிட்டவர்: சி. கல்யாண சுந்தரம், ராணி அச்சகம், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007.